விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 தை 18 ரவி ஆகிர் 5 இதழ் 349
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 31-1-82

## "இலங்கை - இந்திய உறவு மேலும் 2500 ஆண்டுகளுக்கு நீடிக்கும்"

### சென்னையில் நிதி அமைச்சர்

(சென்னை)

'இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாகவே நல்லுறவுகள் இருந்து வருகின்றன. இந்த உறவுகள் இன்னும் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குத் தொடர்ந்து இருந்துவரும்' என்று இலங்கை நிதியமைச்சர் திரு. ரொனி டி மெல் இங்கு கூறினர்.

லங்கா மித்ர கழகத்தின் சார்பில் நடந்த வைபவம் ஒன்றில் இலங்கை அமைச்சர் உரை நிகழ்த்துகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பிரச்னைகள் ஏற்பட்டாலும் அவை ஒரே குடும்ப சகோதரர்களுக்கிடையில் நடைபெறும் தகராறு போன்றவையே என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தியப் பிரதம மந்திரியையும் இதரஅமைச்சர்களையும்சந்தித்துப் பேசியதாகவும் தொழில் துறைகளில் கூட்டு முயற்சிகள் தொடர்பாகத் தாம் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அவைகளில் தமக்குப் பூரண திருப்தி ஏற்பட்டிருப்பதாகவும் 38 தொழில்களில் இந்தியா முதவீடு செய்திருப்பதாகவும் திரு. டி மெல் கூறினர்.

இதே வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் திரு. ராஜாராம் 'இலங்கைத் தீவுக்குகோர் பாலம் அமைப்போம் என்று மகாகவி பாரதியார் பாடியுள்ளார். அது

(8-ம் பக்கம் பார்க்க)

# அச்சுறுத்தலுக்குப் பயந்து

## வெள்ளை அறிக்கையை கைவிடமாட்டோம்!

## ஜனதிபதி கூறுகிறர்

### நியாயமான ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப்படுமாம்

(கொழும்பு)

**"கல்வி வெள்ளை அறிக்கை தொடர்பாக எதிர்க்கட்சியினர் விடுக்கும் அச்சுறுத்தல்களுக்குஅஞ்சப்போவதில்லை. நியாயமான முறையில் தெரிவிக்கப்படும்ஆலோசனைகளுக்குச் செவிமடுத்து,தேவையானல் மாற்றங்கள் செய்வோம்".**

இவ்வாறு ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன நேற்று முன்தினம் பொரளையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கூறினர்.

வன்செயல்களைக் கண்டிப்பதற்காகப் போக்குவரத்து அமைச்சர் ஜனப். எம். எச். மொகம்மதுவினல் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனல் கல்வி வெள்ளை அறிக்கை பற்றியே இக்கூட்டத்தில் பெரும்பாலும் கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

கல்விவெள்ளை அறிக்கைக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடத்தும் இயக்கத்தில் அப்பாவிகளான பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறிய ஜனதிபதி இது பற்றிக் கவலை தெரிவித்தார். தீயசக்திகளால் இம்மாணவர்கள் பயன்படுத்தப்பட்டிருக்கிறர்கள் என்று கூறிய ஜனதிபதி இது 1971ம் ஆண்டு இடம்பெற்ற கிளர்ச்சியை ஞாபகமூட்டுவதாகச் சொன்னர். அவ்வாருன வன்செயல்களுக்கு இந்த நாட்டில் இனிமேலும் இடமில்லையென்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஆங்கில மொழி கட்டாய பாடமாக்கப்படுவது பற்றி எதிர்ப்புக் கிளம்பியிருப்பதைக் குறிப்பிட்ட ஜனதிபதி தீவிரவாதம் பேசுகிறவர்கள் மார்க்ஸியத்தையும் லெனினிஸத்தையும் ஜேர்மன் மொழியிலா அல்லது ரஷ்ய மொழியிலா பயின்ருர்கள் என்றுகேட்டார்.

பயங்கரவாதத்துக்கோ காடைத்தனத்துக்கோ அஞ்சி வெள்ளை அறிக்கையைக் கைவிடப்போவதில்லையென்றும் நியாயமான முறையில் தெரிவிக்கப்படும் ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டு வெள்ளை அறிக்கையில் மாற்றம் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

### பல்கலைக்கழகம்: கூடுதலான மாணவர்கள் அனுமதி

(கொழும்பு)

பல்கலைக்கழகத்திற்கு அடுத்தாண்டு கூடுதலான மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று உயர் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஸ்டான்லி கல்பகே தெரிவித்தார்.

விஞ்ஞானத்துறைக்கே கூடுதலாக மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்களென்றும் அவர் தெரிவித்தார். (வெ)

## இந்தியத் தலைவர்களை சிவா சந்தித்தார்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் புதுடில்லியில் நடந்த தென்கிழக்காசியா ஆபிரிக்க நாடுகளின் பாராளுமன்ற ஒன்றிய மகாநாட்டில் கலந்துகொண்ட பின் கொழும்புத் திரும்பியிருக்கிருர்.

அவர் புதுடில்லியில் இருந்தபோது இந்திய ஜனதிபதி திரு. சஞ்சீவரெட்டியையும்பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியையும் சந்தித்டப் பேசியதாக நேற்று நிருபர்களிடம் தெரிவித்தார்.

மரியாதையின் நிமித்தமே அவர் மேற்படி இந்தியத்

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் பிடிபட்ட தராசு படிகளுக்கு முத்திரையிடும் திகதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்நாட்டு வியாபாரத் திணைக்களத்தினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள முத்திரையிடப்படாத தராசுகளுக்கும் கிலோகிராம், கிராம் படிகளுக்குப் பின்வரும் நாட்களில் யாழ், செயலக அளவைகள் - நிறுவைகள் பிரிவில் முத்திரையிட்டுக் கொடுக்கப்பட விருக்கின்றது.

பெப் 1: கிளிநொச்சிசந்தை,

(8-ம் பக்கம் பார்க்க)

## அமிரும் வரவேற்பார்

(கொழும்பு)

இந்திய ஜனதிபதி திரு. சஞ்சீவரெட்டி பெப்ரவரி 2ம்திகதி இலங்கை வரும்போது அவரை விமான நிலையத்தில் வரவேற்கும் வைபவத்தில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் கலந்து கொள்வார் என்று தெரிகின்றது. (ம)

வ

## திருமண அழைப்பு

மணமகன்:
செல்வன் சி. இளம்பூரணன்
மணமகள்;
செல்வி வசந்தமல்லிகா
இடம்:
நீர்வேலி கந்தசுவாமிகோவில்
காலம்:
3 - 2 - 1982 புதன்கிழமை
நேரம்:
மாலை 4-50 மணி முதல் 6-00 மணி வரை

உறவினர்களையும், நண்பர்களையும்
அன்புடன் அழைக்கின்ருேம்.
தனிப்பட்ட அழைப்புகள் இல்லை.

சு. சிவசம்பு தம்பதிகள்
(மணமகன் பெற்ருேர்)
சுருவில்,
ஊர்காவற்றுறை.

டாக்டர் க. மா. தியாகராசா தம்பதிகள்
(மணமகள் பெற்ருேர்)
''வசந்தசோலை'',
முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்

(2130)

### மத்தியஸ்தர்கள் தவறிழைக்காமலிருக்க

## பிரதானபோட்டிகளின்போது டி. வி. பயன்படுத்தப்படும்!

### பிரதி பொலிஸ் மா அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

உதைபந்தாட்ட முன்னேற்றத்துச்கு இடையூறு விளைவிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென, ஸ்ரீலங்கா உதைபந்தாட்ட கட்டுப்பாட்டுச்சபையின் தலைவரும், வடபிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபருமான திரு. ஏ. நவரத்தினம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ் உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்தக் கூட்டம் யாழ் மத்திய கல்லூரியில் வைத்திய கலாநிதி ஜே. சி. பிலிப்பு தலைமையில் நடைபெற்றபோது, பிரதம அதிதியாக திரு. நவரத்தினம் கலந்துகொண்டு உரையாற்றினர்.

''உதைபந்தாட்ட முன்னேற்றத்துககு கட்டுப்பாடு அத்தியாவசியமானது' இதை மீறி சென்ற காலங்களில் கழகங்கள், வீரர்கள், ரசிகர்களுக்கிடையே மோதல்கள் ஏற்படுவது பிரதானமாக மத்தியஸ்தர்களைத் தாக்குவதும், கொடூரவார்த்தைகளால் நிந்திப்பதும் இங்கு சர்வசாதாரணமாகிவிட்டது என்று கவலை தெரிவித்த பிரதி பொலிஸ் மா அதிபர், இது போன்ற சம்பவங்கள் மேலும் நிகழ்ந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கத் தாம் தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில, உதைபந்தாட்டச் சங்கத்தினுல் அண்மையில் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியின்போது எம்மால் பெருந்தொகையான பணத்தை லாபகரமாகப் பெறமுடிடமாளுல் ஸ்ரீலங்கா உதைபந்தாட்டச் சங்கம் நஷ்டத்தில் இயங்கி வந்ததாகக் கூறப்படுவதை யார்தான்நம்ப முடியும் என்று கேட்டார்.

விளையாட்டு அமைச்சின் அனுசரணையின் கீழ் உருவாக்சப்பட்ட உதைபந்தாட்ட கட்டுப்பாட்டுச்சபை பல முக்கிய விஷயங்களை ஆச்கபூர்வமாக செய்யத் தீர்மானித்துள்ள

(8-ம் பக்கம் பார்க்க)

# பாருக்குள்ளே நல்ல நாடு!

இந்தியக் கலை: இந்திய கலாசாரம், இந்திய இலக்கியம், இந்திய நாகரிகம், இந்திய தத்துவம், இந்திய ஆன்மீகம் என்ற இந்திய உபகண்டத்தின் இவை அனைத்தும், உலகிலே ஒரு தனித்துவமான—உன்னதமான—கீர்த்தியைப் பெறுவன. ''பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு'' என்று இந்தக்களிப்பை வெளியிட்டான் பாரதி.

இந்திய சிந்தனையையும், இந்திய குணதிசயத்தையும், இந்திய புலனுணர்வையும், இந்திய ஆற்றலையும், இந்திய முனைப்பையும் மீட்பதாயின் அதன் தொன்மையான வரலாறு, தத்னவம், கலை, இலக்கியம் ஆகியவற்றின் மூலத் தோற்றுவாய்க்குச் செல்ல வேண்டும்.

அவை தம்மகத்துக்கொண்டுள்ள புத்நாக்கமூட்டும் செல்வாக்கை இனம்கண்டுகொள்ள வேண்டும்.

தடைப்படுத்தப்பட்டுவிட்ட இம்முயற்சியை விட்ட இடத்திலிருந்து தொடரவேண்டும்.

தனிமனிதனிலும், சமுதாயத்திலும், ஆத்மீக வாழ்விலும், உலோகாயத வாழ்விலும், தத்துவத்திலும் சமயத்திலும், சிந்தனையிலும் செயலிலும் பாரதத்தின் அதியுன்னத அறிவினதும் ஆத்மாவினதும் தயக்கமற்ற—நிறைவான உணர்வை முற்றுமுழுதாக மேற்கொண்டு பூரணமாக நிறைவேற்றவேண்டும்—

என்ற இந்தச் சிந்தனைகள்—குரல்கள்—பாரதத்தில் இன்று எழுகின்றன.

இந்தியக்கலைகள் அனைத்தின் மீதும் சிற்பம் முதல் இலக்கியம் வரை இந்திய சாஸ்திரீய நடனம் பிரமாண்டமான தாக்கத்தை ஏற்படுத்தியதென்பது இன்று ஐயத்திற்கப்பாற்பட்ட விடயம். சிற்பச் சான்றுகளைவிட கி. பி. 2ம் நூற்றூண்டின் முற்பகுதியிலிருந்து 19ம் நூற்றூண்டு வரையான காலப்பகுதியின் ஏராளமான வேறும் பல சான்றுகள் சிற்ப, இலக்கிய மரபுகளிலே நடனத்தின் செல்வாக்கைச் சாற்றுகின்றன.

உண்மையில் இச்சான்றுகள், நடனக்கலை ஏனைய கலைகளுடன் கொண்டிருந்த தொடர்பைப் பற்றித் திட்டவட்டமான விதத்தில் கூற முடியாத ஒரு நிலையைத்தான் ஆராய்ச்சியாளருக்கு ஏற்படுத்தியிருக்கின்றன; எனின், இத்தொடர்பு பற்றிய கூற்றுக்கள் ஓரளவுக்கே உண்மையானவையாகவும், இஃது பற்றிய முடிவுகள் அநுமானங்களாகவுமே இருக்கின்றன. ஆனாலும் பண்டைக் காலத்திலிருந்தே இக்கலையின் செழிப்பு வாய்ந்ததும் உயிர்நிலையானதுமான ஒரு மரபு இருந்ததென்பது மாத்திரம் துல்லியமாகிறது.

இந்தியாவின் பண்டைக்கால சரித்திரங்களும் இதற்குப் போதுமான சாட்சியங்களை அளிக்கின்றன. மொகஞ்சதாரோ சிற்பங்களிற்காணப்படும் நடனமங்கையும் ஹரப்பா காலத்து உடைந்த பாதமும் இச் சான்றையே அளிக்கின்றன.

மேலும் வேதங்களிலே நடனத்தை அடிப்படையாகக் கொண்ட பல அழகான உருவகங்கள் சொல்லப்படுகின்றன, 'உஷத்' காலம் பற்றிய வர்ணனைகள் அதில் மிகவும் அழகானவை. இருக்கு யசுர், அதர்வ வேதங்கள் நடனம் பற்றிக் குறிப்பிடுகின்றன.

ஆக, இந்திய நடனத்தின் வரலாற்றை மேலெழுந்தவாரியாக இருகால கட்டங்களாகப் பிரிக்கலாம். ஒன்று, கி. மு, 2ம் நூற்றூண்டிலிருந்து 9ம் நூற்றூண்டு வரையான காலகட்டம், மற்றையது, கி. பி, 10 அல்லது 11ம் நூற்றூண்டிலிருந்து 18—ம் நூற்றூண்டு வரையான காலகட்டம்.

முதலாவது கால கட்டத்தில் அறிவியல்துறையில் சமஸ்கிருதம் பெருஞ்செல்வாக்கைப் பெற்றிருந்தது. அதன் இலக்கியச் செழுமை எல்லாக்கலைகளினதும் ஒன்றிய தொடர்ச்சியான வளர்ச்சிக்கு வாய்ப்பாகவிருந்தது.

இரண்டாவது காலசட்டத்திற்றுன் பிரதேச ரீதியான கலை வடிவங்கள் மலர்ந்தன.

முதலாவது காலகட்டத்தில் பரத முனிவரின் நாட்டிய அரசியல் கொந்தளிப்பு மிகுந்த சமூக ஆதரவு குன்றிய காலங்களிலும் இந்த சாஸ்திரீய நடனங்கள் ஒவ்வொரு பிரதேசத்திலும் பேணப்பட்டும் செம்மைப்படுத்தப்பட்டும் வந்திருக்கின்றன. வாய்மொழித் தொடர்ந்த இந்நடன மரபுகளின் பொக்கிஷங்களாகத் திகழ்ந்த ஆசான்கள் இந்நடன வகைகளைப் பாதுகாத்துவளம்படுத்தி வந்தார்கள். அடிப்படைக்கல்வி அவர்

## "உயிர்ப்பு!"



பத்மா சுப்பிரமணியம்

சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட வாறுன மரபுகள் கண்டிப்போடு பின்பற்றப்பட்டன; நடனம், நாடகம், இசை என்ற இவை, ஒன்றிலிருந்து மற்றொன்றுபிரிக்கவியலாதனவாக இருந்தன.

இரண்டாவது காலகட்டத்தில், பிரதேசரீதியான நடன வகைகள் நாட்டிய சாஸ்திரத்தையே பொது அடிப்படையாகக் கொண்டு, சில திரிபுகளுடன் வளர்ச்சியடைந்தன. சாரங்கதேவரின் 'சங்கிதரத்னகரம்' பிரதேசரீதியாக வளர்ச்சியடைந்த இம்மாற்றங்கள் பற்றிக்கூறும் அங்கீகாரம் பெற்ற முதல் நூலாக இருக்கிறது. சாஸ்திரியமான அம்சங்களை 'மார்க்க பத்ததி' என்னும் பிரதேச ரீதியாக ஏற்பட்ட மாற்றங்களை 'தேசி பத்ததி' என்றும் சங்கீதரத்னகரம் கூறுகிறது. இந்த பிரதேச ரீதியான நடன வடிவங்களுக்கு கிடைத்த அங்கீகாரம் பல்வேறு பிரதேசங்களிலும் தனிப்பட்ட தனித்துவமான 'சாஸ்திரீய நடன வகைகளை' நிதர்சனமாக்கியது.

—எனினும் 'நிருத்தம்' 'நிருத்தியம்' என்றும் 'தாண்டவம்', 'லாஸ்யம்' என்றும் நடனம் தொடர்ந்து இருவகையாக பிரிக்கப்பட்டிருந்தது- அத்துடன் அவ்வப் பிரதேச மொழி வளங்களுடனும் அவை வளர்ச்சியடைந்தன.

பரதநாட்டியம், கதகளி, மணிப்புரி' ஓடிஸி, கதக் எதுவாகவிருந்தாலும் இச் சமகால சாஸ்திரீய நடன வகைகளின் தோற்றுவாய் கி. பி. 13ம் நூற்றூண்டுக்கும் கி. பி 18ம் நூற்றூண்டுக்குமிடையேயான மத்திய காலப்பகுதியென்றே கூறப்படுகிறது.

களுக்கு போதுமானதாகவில்லாமலும், சமஸ்கிருதமொழிப் பழக்கமில்லாமலுமிருந்த போதும் இந்நடன மரபுகளின் வளர்ச்சிக்கும் அவற்றை

(7ம் பக்கம் பார்க்க)

## மாலி

முல்லைத்தீவு மாவட்ட

# சரித்திர-கலாசார விபரங்கள்

[நேற்றைய தொடர்ச்சி]

மேற்கு நாட்டிலே எழுதிக்குவிக்கிருர்கள். ஆனால் கிழக்கிலோ பேசித்தள்ளுகிருர்கள்.

பண்டாரவன்னியன் 1803ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30ம் திகதி அந்நியரான வெள்ளையரினுல் தோற்கடிக்கப்பட்டான். இதற்கான குறிப்பொன்றுகற்சிலையில் பொறக்கப்பட்டு கற்சிலைமடு என்ற கிராமத்தில் உண்டு. இச்சிறு கிராமம் முத்தையன் கட்டு குடியேற்றப்பகுதியின் தலைநகரான ஒட்டிசுட்டானிலிருந்து நாலுகிலோ மீற்றர் தொலைவில உண்டு.

வன்னியை ஆண்ட கடைசி மன்னன் இவனுவான். இவன் மறைந்து 178 வருடங்களாகின்றன.

கண்டிமன்னனுக்கு தொடர்ந்து உதவியளித்து வெள்ளையர் கண்டியைக் கைப்பற்றுவதற்கு தொல்லையாக இருந்ததாகக் கருதப்பட்டது. இதனுலேதான் வன்னியைக் கைப்பற்றவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மேலும் கரையோரப் பிரதேசம் முழுவதும் தம்மாட்சியின் கீழ் கொண்டுவந்ததனுல் கண்டிமீது கவனம் செலுத்துவது நல்லதென எண்ணியிருந்திருக்கலாம்.

இம்மன்னன் தப்பியோடிக் தமக்கையிடம் பனங்காமம் சென்ருன். பனங்காமம் பிரிவைத்தமக்கை ஆட்சிசெய்தார். அங்கிருந்து சுகப்பட்டு கொண்டு இந்தியா சென்று மீண்டும் வெள்ளையரைத் தாக்க கனகராயன்குளம் வந்தான் என்றும் கூறுவோரும் உண்டு.

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டவற்றையும் அறிந்துள்ளபோதிலும் கிட்டத்தட்ட 200 வருடங்களுக்குள் நடந்த பண்டாரவன்னியனின் ஆட்சியைப்பற்றி அறியமுடியாமல் இருப்பது கவலைக்குரியது, இவருடைய பிறப்பு. வரலரறு, சேவைகள், மாளிகைகள், படைகள் பற்றி எமக்குஎன்ன தெரியும்? இவருடைய ஆட்சிக் காலத்தில் அரண்மனைஎங்கிருந்தது? இதன் சுவடுகள் ஏதும் இப்போதாவது தேடிக்காணப்பட முடியுமா? இவை பற்றிய சுவடுகள் எங்குள்ளன?

சண்டியை ஆண்ட கடைசி மன்னனுன ஸ்ரீ விக்கிரமராசசிங்கனின் அணிகலன்கள் நூதனசாலையிலும் வைக்கப்பட்டுள்ளன.

வெள்ளையர்கள் எம் மன்னர்களைத்தோற்கடித்தாலும்மதிப்புக்குரிய பொருட்களை எடுத்துச் செல்லாமல, எடுத்துச் சென்றுலும் குறிப்புகள, பதிவுகள் வையாமல் விடார்கள்.

யாழ்ப்பாண ராச்சியத்தை ஆண்ட சங்கிலி மன்னனுடைய அரண்மனை அமைந்த இடம் எது என்பதை அறியக்கூடியதொன்ருக உள்ளது. ஆனுல் 500வருட காலத்துச் சரித்திரம்எப்படிச் சரியாகத் தெரியாமல் போய்விட்டது?

[நாளை முடியும்]

- த.மார்க்கண்டு -

## இலவச பாடப் புத்தகங்கள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் இலவசபாடப் புத்தகங்கள் வழங்கப்பட்ட இரண்டாவது வருட நிறைவு விழா கல்லூரி அதிபர் திரு. வி நாகராஜா தலைமையில் கொண்டாடப்பட்டது.

கடந்த வருடத்தில் இக்கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்பட்டஇலவச பாடப்புத்தகங்களில் 75 வீதமான புத்த

(7ம் பக்கம் பார்க்க)

## சேரதீவு பாதைச்சேவை இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

சேரதீவு—சங்குப்பிட்டிடக்குப் பாதையில் திருத்தம் செய்ய வேண்டியருப்பதால் வாகனங்களுக்கான பாதை சேவை மட்டும் நாளை முதல் ஒரு வாரத்துக்கு தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதம பொறியியலாளர் திரு. எஸ். பாலேந்திரா அறிவித்துள்ளார்.

படகுச்சேவை வழமை போல் இயங்கும். (இ)

சிசன்டிக்கட் விநியோகத்தால்

# யாழ். பஸ் டிப்போவுக்கு

## 6 மாதத்தில் ரூ. 76லட்சம் இழப்பு!

### சலுகையை துர்ப்பிரயோகம் செய்தால் சட்டநடவடிக்கை என்று கூறுகிருர் தலைவர்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் யாழ். சாலையினுல் வழங்கப்படும் பருவச்சீட்டுக்களினுல் கடந்த 6 மாதங்களில் சுமார் 76 லட்சம் ரூபா வருமானத்தை இச்சாலை இழந்துள்ளது. இந்நிலையில் சலுகைக்கட்டணத்துடன் வழங்கப்பட்டு வரும் பருவச்சீட்டுக்களை பொதுமக்கள் சிலரும் பாடசாலை, தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களில் ஒரு பகுதியினரும் துர்ப்பிரயோகம் செய்துவருகின்றனர். தொடர்ந்தும் இந்நிலை நீடிக்கும் பட்சத்தில் இச்சலுகையைத் துர்ப்பிரயோகம் செய்துவருபவர்கள்மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படும்,

இவ்வாறு வடபிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைவரும் தகவுடை அதிகாரியுமான திரு, சி. கனசரத்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்

திரு. கனகரத்தினம் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பேருந்துப்பயணக்கட்டணங்கள் உயர்த்தப்பட்ட வேளை செய்யப்பட்ட பிரதிநிதித்துவங்களைத் தொடர்ந்து பருவகாலச் சீட்டுக்களுக்குக் கழிவுகள் அளிப்பதென அரசு முடிவு செய்தது. இம் முடிவைத் தொடர்ந்து போக்குவரத்துச் சபை வெகுகவர்ச்சிகரமான கழிவுகளை பருவகாலச் சீட்டுக்களுக்கு அளித்தது.

இந்தவகையில்:

12 வயதுக்குட்பட்ட பாடசாலைச் சிறுர்களின் பருவச் சீட்டுகளுக்கு 85 சதவீதமும் 12 வயதுக்குமேற்பட்ட பாடசாலைச் சிறுர்களின் பருவச் சீட்டுகளுக்கு 80 சத வீதமும் பல்கலைக்கழக, தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் பருவச்சீட்டுகளுக்கு 75 சத வீதமும் வயது வந்தோர் பருவச் சீட்டுகளுக்கு 35 சதவீதமும் தற்போது கழிவுகள் அளிக்கப்பட்டுவருகின்றன.

பொதுமக்களின் நன்மை கருதி வழங்கப்படும் இச்சலுகை பொதுமக்களிற் சிலராலும், பாடசாலை, தொழில்நுட்பக்கல்லூரி என்பவற்றைச் சேர்ந்த மாணவர்களில் ஒரு பகுதியினராலும் தவருக உபயோகிக்கப்படுவதுகண்டு உண்மையிலே நான் மிக்க வேதனையடைகிறேன்.

நம்நாட்டில் வசிக்கின்ற மக்களுக்கு அதிலும் குறிப்பாக வடபிராந்தியத்தில் வாழ்கின்ற மக்களுக்கு சிறந்த பேருந்துச் சேவையை அளிக்கவேண்டுமென்ற எண்ணத்தினுல் உந்தப்பட்டே நான் வடபிராந்திய போக்குவரத்துச் சபைத்தலைவராகப் பதவியேற்றேன். எனது பணியைச் செவ்வனே நிறைவேற்றுவதற்குப் பொதுமக்களாகிய உங்கள் ஒத்துழைப்பு இன்றியமையாதது.

பாடசாலை மாணவர்களுக்கு அவர்கள் கல்வி பயிலும் பாடசாலையிலேயே பருவச் சீட்டுக்களைப்பெற்றுக்கொள்ள வழிசெய்யும் திட்டமொன்றினை 1982ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் செயற்படுத்த எண்ணியுள்ளேன். இது தொடர்பாக முக்கிய பாடசாலை அதிபர்களையும், வடபிராந்திய கல்விப் பணிப்பாளரையும் நான் மகாநாடொன்றுக்கு அழைத்துள்ளேன்.

சட்டம் கடுமையாக இருக்கின்றபோதிலும், இதுகாறும் பருவகாலச் சீட்டுத் துர்ப்பிரயோகச் சம்பவங்கள் தொடர்பாக எமது அலுவலர்கள் தவறிழைத்தவர்கட்கெதிராக நீதிமன்றம் வரை நீதி கோரிச் சென்றதில்லை. மக்களுக்கு வச

[7ம் பக்கம் பார்க்க]

# வரட்சி நிவாரணம் பெறுவதற்காக காத்திருந்த ஏழைமக்கள் மீது ராணுவம் நடத்திய தாக்குதல்!

## வவனியா அபிவிருத்தி சபை கண்டனம்

[வவனியா]

இனக்கலவரத்தின் பழுவைச் சுமந்து மலையகத்திலிருந்து வந்த தமிழ்மக்கள் குடியேறியுள்ள பிரதேசங்களில் குறிப்பாக கணேசபுரம், மடு றேட்டில் கடந்த 12ந் திகதிவரட்சி நிவாரண வேலைஊதியத்தைப் பெறுவதற்காக காத்துநின்ற ஏழைமக்கள் மீது இராணுவத்தினர் காரணம் இல்லாது தாக்கி வெறியாட்டம் ஆடியதாகக் கூறப்படும் சம்பவத்தை வவனியா மாவட்ட அபிவிருத்திசபை வன்மையாகக் கண்டித்துள்ளது.

29ந் திகதி நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திசபை மாதாந்தக்கூட்டத்தில் இப்பிரேரணையை தலைவர் திரு. எம். சிற்றம்பலம் கொண்டு வந்தார்.

இந் நியாயமற்ற செயலை செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென இராணுவ உயர்அதிகாரிகளைக் கோருவதென்றும், இந்நிகழ்ச்சியை ஜனாதிபதியின் கவனத்துக் கொண்டுவருவதென்றும் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டது.

இராணுவதாக்குதல்குறித்து சகல உறுப்பினர்களும்வன்மையாக கண்டித்தனர். பிரேரணை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

### புலமைப்பரிசில்

திட்டமிடல் பணிமனையில் நடைபெற்ற கூட்டத்தில், வவனியா மாவட்டத்தில் இருக்கும் பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களுக்கும், இம் மாவட்டத்தில் பாடசாலைகளில் உயர் கல்வி படிக்கும் மாணவர்களுக்குமாக புலமைப் பரிசில் வழங்குவதற்கு அபிவிருத்திசபையின் ஆளுமையின் கீழ் ஒரு நிதியை உருவாக்குவதென்றும் அதன்மூலம் கல்வியில் ஆர்வம்கொண்டு வேண்டிய கல்வியைப் பெறுவதற்கான பொருளாதார வசதியற்ற மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கவேண்டும் எனவும் தலைவர் திரு. சிற்றம்பலம் குறிப்பிட்டார்.

திரு. வி. பரராசசிங்கம் கொண்டுவந்த பிரேரணையில், வவனியா கல்வியில்பின் தங்கிய ஒரு பிரதேசம். எனவேஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும் போது க. பொ. த. சாதாரணம் சித்திபெற்றவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

மலையகத்தைப்போல் இம் மாவட்டத்துக்கு இந்தசலுகை வழங்கவேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார். இப் பிரேரணையும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

# தேநீர் ஒரு நல்மருந்து

மாஸ்கோ, ஜன. 30

இரத்த அழுத்தத்தைத் தடுக்கும் நல்மருந்தாக தேநீரைப் பயன்படுத்தலாம் என்று சோவியத் விஞ்ஞானி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜோர்ஜியாவிலுள்ள தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் தலைவரான ரெவாஸ் ஹொபெரியா, பல பரிசோதனைகளின் பின்னர், தேயிலையிலுள்ள நோய் குணப்படுத்தும் அம்சங்களை உறுதிப்படுத்தியுள்ளார்.

நீண்டகாலம் தேயிலை குறித்து ஆராய்ச்சிகளை செய்து வந்த ஹொபெரியா இத்தாவரம் குறித்துப் பல ஆராய்ச்களைஎழுதியுள்ளார். அண்மைக்கால ஆராய்ச்சிகள் ரத்தத்திலுள்ள அணுக்களை தேயிலை விருத்தி செய்கிற என்பதை உறுதி செய்துள்ளன.

கடந்த நூற்றுண்டு முதல் ஜோர்ஜியாவில் தேயிலை விளைவிக்கப்பட்டு வருகிறது. ஆண்டொன்றுக்கு இக்குடியரசு 125,00 தொன்கள் தேயிலையை உற்பத்திசெய்கிறது. (இ)

# கப்பல் பிரயாணிகளின் வசதிக்கு புதிய பஸ்சேவை

(யாழ்ப்பாணம்)

தலைமன்னார் — இராமேஸ்வரம் கப்பல் பிரயாணிகளின் வசதிகளை முன்னிட்டு புதிய பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் யாழ். மத்திய பஸ் நிலையத்திலிருந்து காலை 6—30 க்கு தலைமன்னாருக்குப் புறப்படும் பஸ், அங்கு பிற்பகல் 3—00 மணியளவில் சென்றடையும் என்றும், தலைமன்னாரிலிருந்து செவ்வாய், வியாழன், ஞாயிறு ஆகிய நாட்களில் நள்ளிரவு 12—15 க்கு புறப்பட்டு அதிகாலை 8—00 மணிக்கு யாழ். பஸ் நிலையம் வந்துசேரும் என்றும் மத்திய பஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தியா செல்லும் பிரயாணிகள், யாழ். பஸ் நிலையத்தில் முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவு செய்துகொள்ளலாம் என்றும், அதிகமான பஸ் பிரயாணிகள் ஆசனங்களைப் பதிவு செய்துகொள்ளும்பட்சத்தில் கூடுதலான பஸ்கள் சேவையில் அமர்த்தப்படும் என்றும் அவர் கூறினார்.

# மேலதிகநேர வேதனம் அதிகரிப்பு

(பண்டத்தரிப்பு)

சுகாதார அமைச்சு அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் ஆஸ்பத்திரி ஓவசியர்கள், மருந்து கலவையாளர்கள், ஆஸ்பத்திரி பணியாளர்கள் சாதாரண தொழிலாளர்கள், சுகாதார தொழிலாளர்கள் ஆகியோரின் மேலதிகநேர வேலைக்கான [ஓவர்டைம்] வேதனம் ஜனவரி மாதம் தொடக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றிய சுற்றறிக்கை ஒன்றை சுகாதார அமைச்சு நாட்டிலுள்ள சகல அரசினர் வைத்தியசாலைகளுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

இந்தசுற்றறிக்கையின்பிரகாரம் இதுவரைகாலமும் மாதந்தோறும்45ரூபாமேலதிகநேரப் படியாகப் பெற்றுவந்த ஆஸ்பத்திரி ஓவசியர்களுக்கு இனிமேல் 80 ரூபாவும், 42 ரூபா 50 சதம் மேலதிகநேர வேதனமாக பெற்றுவந்த மருந்து கலவையாளர்களுக்கு இனிமேல் 70 ரூபாவும், 40 ரூபா மேலதிகநேர வேதனமாக பெற்றுவந்த ஆஸ்பத்திரிபணியளர்களுக்கு இனிமேல் 80 ரூபாவும், 40 ரூபா மேலதிக வேதனமாகப் பெற்றுவந்த சாதாரணதொழிலாளர்களுக்கு இனிமேல் 80 ரூபாவும் வழங்கப்பட இருக்கிறது. (இ)

பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கம்

# மக்கள் வங்கியில் கடன்வாங்க தீர்மானம்

(பண்டத்தரிப்பு)

பாவனையாளர்களுக்கு அத்தியாவசியமான நுகர்ச்சிப் பொருட்களை கொள்வனவு செய்து சங்கக் கிளைகள் மூலமாக வழங்குவைற்கு ஏழு லட்ச ரூபாவை மக்கள் வங்கியிடமிருந்து கடனாக பெறுவது என்று பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபைதீர்மானித்துள்ளது.

சங்கத் தலைவர் திரு. எஸ், இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த இயக்குனர் சபைக் கூட்டத்தில் இந்தியாவிலிருந்து அண்மையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள 16 மின்தறி யந்திரங்களையும் பொருத்தி இயங்கச் செய்வதற்கு மக்கள் வங்கியிடமிருந்து மேலும் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவை கடனாக கேட்டுப் பெறுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# ஏழை மாணவர் பயன்பெறுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

இலவசப் பாடப்புத்தக விநியோக 2 ம் ஆண்டு நிறைவு விழா கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் அதிபர் திரு. கா, கணேசதாசன் தலைமையில் நடைபெற்றது.

திரு. கா. கணேசதாசன் தமது உரையில் அரசாங்கம்

(5 ம் பக்கம் பார்க்க)


மயிர்க்கொட்டி உங்கள் பயிர்களைத்தாக்குமுன் அதனைத் தாக்குங்கள்




லன்னேற்-எல் உபயோகியுங்கள்

காய்கறி வகைகள், மிளகாய்ச்செடி, வெங்காயம், புகையிலை முதலிய பெறுமதியான உங்கள் பயிர்களை மயிர்க் கொட்டி தின்று அழிக்கு முன்னர் அதனையே கொன்று அழியுங்கள்.

லன்னேற் எல் கூட்டுறவுக்கடைகள், லங்கெம் விவசாய சேவை நிலையங்கள் ஆகியவற்றிற் கிடைக்கும்.

யூ. எஸ் ஏ. டெலவெயார், வில்மிங்டன், ஈ. ஐ. டு பொன்ட் டீ நெமர்ஸ் அன்ட் கம்பனி (இன்கோர்பரேட்டட்) நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட ® வர்த்தக அடையாளம்

50 மி. லீ. - ரூ. 15-50



நீங்கள் ஒரு கராஜ் சொந்தக்காரராகவோ அல்லது புதிய, புதுப்பிக்கப்பட்ட வாகனத்தின் இறக்குமதியாளராகவோ இருப்பின் எமது காரியாலயத்தில் "முகவராக"ச் சேர்ந்து மேலதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

நாம் பிரதானமாக கீழ்க்கண்ட இடங்களில் வசிப்பவர்களையே முகவர்களாக விரும்புகின்றோம்.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | சங்கானை | கிளிநொச்சி |
| அச்சுவேலி | வட்டுக்கோட்டை | வவுனியா |
| புத்தூர் | காரைநகர் | மன்னார் |
| வல்வெட்டித்துறை | கொடிகாமம் | முல்லைத்தீவு |
| காங்கேசன்துறை | சாவகச்சேரி | |

மேலும் விபரங்களுக்கு கடிதமூலமாகவோ அல்லது நேரில் வந்தோ என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

விற்பனை முகாமையாளர்,

TFC

த பிறுன்ஸ் கம்பனி லிமிட்டெட்,

249, மின்சார நிலைய வீதி, யாழ்பாணம்.

எமக்கெதிரான இன்னொரு கொலை வழக்கில்

# எதிரிகள் சாட்சிகளானாலும்

## எனக்கு அவர்கள் மீது கோபதாபமில்லை!

### கம்பர்மலை அறுவர் கொலைவழக்கில் சாட்சியம்

(புலோலி)

''நானும், எனது தகப்பனார் நாராயணசாமியும், கொலையுண்ட சகோதரன் கருணேஸ்வரனும் எதிரிகளாகவுள்ள தங்கலிங்கம் துப்பாக்கிச் சூட்டுக் கொலைவழக்கில், இக்கொலைவழக்கின் எதிரிகளான தங்கராசா தேவராசா சாட்சிகளாக சாட்சியமளித்திருந்தாலும் அவர்கள்மீது எனக்குக் கோபதாபம் இருக்கவில்லை''

இவ்வாறு, கம்பர்மலை பயங்கர துப்பாக்கிச் சூட்டு அறுவர் கொலைவழக்கு விசாரணையில் சாட்சியமளித்த கம்பர்மலை முக்கொலைச் சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நாராயணசாமி அழகேஸ்வரன் 2ம், 3ம், 7ம் எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஸ்ரீ மோதிலால்நேருவினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது குறிப்பிட்டார்.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே, எஸ், மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுவரும் இக்கொலைவழக்கில் தொடர்ந்து சாட்சியைச் சட்டத்தரணி மோதிலால்நேரு குறுக்குவிசாரணை செய்தார்.

சட்: நீர் அடிக்கடி நீதிமன்றத்திற்கு எதிரியாக வந்துள்ளீர்?— இம் மன்றுக்கு இரு தடவை எதிரியாக வந்துள்ளேன். இம்மன்றில் சைக்கிள் அடித்துப்பறித்த வழக்கொன்றில் சந்தேக நபராக இருக்கிகன்றேன்.

சட்: தங்கலிங்கம் துப்பாக்கிச் சூட்டுக்கொலை வழக்கில் ஒரு எதிரி?—ஆம்.

சட்: வல்லை முக்கொலை வழக்கில் ஒரு சந்தேகநபர்?— ஆம்.

சட்: நீர் இப்போ விளக்கமறியலில் இருக்கின்றீர்?— ஆம்.

சட்: முல்லைத்தீவுக் கோர்ட்டில் ஏதாவது வழக்கு உண்டா?— அங்கு கிறிமினல் வழக்கில் நான் எதிரியாகவில்லை.

சட்; நீர் சம்பவதினத்தன்று ஆறு பேரைக் கண்டதாகச் சொன்னீர், அதில் இருவர் நீர் எதிரியாகவுள்ள தங்கலிங்கம் கொலைவழக்கில் சாட்சியாக சாட்சியமளித்ததை நீர் இம் மன்றின் எதிரிக்கூண்டிலிருந்து கேட்டுக் கொண்டிருந்தீர்?— ஆம்,

சட்: அந்த இருவரும்?— தங்கராசாவும்; தேவராசாவும் அவர்களில் தேவராசா இறந்துவிட்டார். தங்கராசா மன்றில் இருக்கின்றார்.

சட்: 25. 7. 81க்கு முன்பாக நீர் எதிரியாக இருக்கும் தங்கலிங்கம் கொலைவழக்குச் சாட்சியாக தங்கராசாவும், தேவராசாவும் சாட்சியமளித்ததனால் தங்கராசா, தேவராசா மீது உமக்கு கோபதாபமில்லையா?—இல்லை.

சட்: அவ்வழக்கில் நீரும். உமது தகப்பனார் நாராயணசாமியும், சகோதரர் கருணேஸ்வரனும் எதிரிகள்?— ஆம்.

சட்; அது ஒரு கொலை வழக்கு?—ஆம்.

சட்: அப்படியிருந்தும் தங்கராசாவும் தேவராசா மீதும் நீர் கோபப்படவில்லை?— இல்லை.

சட்; இந்த எதிரிகள் உங்கள் சொந்தக்காரர்கள்?— எனக்குத் தெரியாது.

சட்: சம்பவதினத்தன்று வெடிச் சத்தம் கேட்டபோது நீர் எழும்பி ஓடிச் சென்று மறைவில் இருந்தீர்?—ஆம்.

சட்: வெடிச் சத்தம் கேட்டு ஓடிப்போய் ஒளித்திருந்தபோது யார் வெடிவைத்தார்கள் என்று உமக்குத் தெரியாது?—ஆம் தெரியாது.

சட்: நீர் துவக்கு வெடிச்சத்தம் வந்ததற்கு எதிர்ப்பக்கமாக ஓடினீர்?—ஆம்.

சட்: அப்படி ஓடியதற்குக் காரணம் உமக்கும் வெடிவைக்கப்படும் என்ற பயத்தினால்?— ஆம்.

சட்: யார் யாரைச் சுட்டது என்று தெரியாமல் ஏன் ஓடினீர்?—துவக்கு வெடிச் சத்தத்திற்குப் பயந்தபடியால் ஓடினேன்.

சட்: சம்பவதினத்தன்று முதல் கேட்ட வெடிச் சத்தத்திற்கும் மற்ற வெடிச் சத்தங்களுக்கும் இடையில் எவ்வளவு நேரமெடுத்திருக்கும்? —தொடர்ந்து கேட்டன. இடையில் 2, 3 நிமிடங்கள் இருக்கும்.

சட்: நீர் ஓடிப்போய் எங்கு ஒளிந்திருந்தீர்? —பாவட்டையும் பனையும் உள்ள இடத்தில் ஒளிந்திருந்தேன்.

சட்: எவ்வளவு நேரம் மறைவில் இருந்தீர்?— சுமார் 6, 7 நிமிடங்களாக.

சட்: அதன்பின் அங்கிருந்து வெளிக்கிட்டு பொலிசிற்குப் போனீர்? —ஆம்.

சட்: நீர் ஒளிந்திருந்த இடத்திற்கும் பொலிஸ்நிலையத்திற்கும் இடைத்தூரம்? — சுமார் 3/4 மைல்.

சட்: நீர் அங்கிருந்து பொலிசிற்கு ஓட எவ்வளவு நேரம் எடுத்திருக்கும்?— 1/4மணித்தியாலங்கள் வரையில்.

சட்: பின்பு பொலிசாருடன் திரும்பி வந்தீர்!—ஆம்.

சட்: எந்த றூட்டால் திரும்பிவந்தீர்கள்?— உடுப்பிட்டியால் கொம்மந்துறை போய் திரும்பிவந்தோம்.

சட்: நீர் சென்ற பொலிஸ் ஜீப் வல்வெட்டி கிணற்றடியால் வந்ததா?— இல்லை. கம்பர்மலைவாசிகசாலையில் இருந்து தகப்பனார் வீடு சுமார் 1/4 மைல் தூரத்திலுள்ளது.

சட்: நீர் பொலிசாரோடு ரோகினி அம்மா வீட்டிற்கும் தகப்பனார் வீட்டிற்கும் வரும் வரையும் யார் யாருக்குச் சூடு விழுந்ததென்பது தெரியாது? —ஆம்.

சட்: நீர் பொலிசிற்குப்போவதற்கு முன் இந்த ஆறு எதிரிகளையும் கண்டுவிட்டீர்? —ஆம். நான் சூட்டுச்சத்தம் கேட்ட பின் சந்தேகநபர்களைக் கண்டதும் பயத்தினால் ஓடிவிட்டேன்.

சட்: இராசதுரை வீட்டிற்கு பொலிசாருடன் போனதாகக் கூறினீர்?— ஆம் எதிரிகளைப் பிடிப்பதற்காக கொம்மந்துறையிலுள்ள இராசதுரை வீட்டிற்குப் போனோம்.

சட்: ஆனால் இந்த எதிரிகள் நீங்கள் இராசதுரை வீட்டிற்குப் போகும்போது என்ன குற்றம் புரிந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியாது?— ஆம்.

சட்: அப்புத்துரை தில்லை நடராசா வீடு தாண்டித்தான் இராசதுரை வீட்டிற்குப் போகவேண்டும்?— ஆம்.

சட்: ஆனால் நீங்கள் அப்புத்துரை தில்லைநடராசா வீட்டிற்குப்போகவில்லை?— ஆம்.

சட்: நீர் இச் சம்பவம் ஒன்றையும் காணவில்லை. உமக்கு இருந்த பழைய பகைமையின் காரணமாக இந்த எதிரிகள் இதைச் செய்திருக்கலாமெனக் கருதிச் சொல்கிறீர்? —அதை நான் மறுக்கிறேன்.

பொலிஸ் ஜீப்பில் பொலிசாருடன் நானும் சென்றேன். இராசதுரை வீட்டிற்கு நான் தான் பொலிஸ் ஜீப்பை கூட்டிச் சென்றேன். எதிரிகளைப் பிடிப்பதற்காகவே அங்கு சென்றோம்.

## தமிழ்தின விழா இன்று

(யாழ்ப்பாணம்)

கைதடி குருசாமி கனிஷ்ட வித்தியாலயத்தின் தமிழ்த் தினவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

மேற்படி விழாவில் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா மங்களவிளக்கேற்றி வைப்பார். யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. வே. சபாநாயகம் பிரதம விருந்தினராகவும் சாவகச்சேரி எம். பி. திரு. வி, என். நவரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். (உ)


27%

இலங்கையில் இரண்டாவதாக ஆரம்பமான
பினான்ஸ் கம்பனி. ஸ்தாபிதம்: மே 1940-ம் ஆண்டு

இயக்குநர்கள்
திரு. ஜே. எல். பி. கொத்தலாவெல, ஏ. எம். எக்ஸ, லண்டன் (தலைவர், நிர்வாக இயக்குநர்)
திரு. பி. டி. விசுவாசம் எவ். சி. ஏ. (நிதி இயக்குநர்)
சட்டத்தரணி திருமதி பி. கே. கருணநாயக்கா (பொது முகாமையாளர்)
திருமதி என். மடவெல (காரியதரிசி)
திரு. டி. ஆர். சேனநாயக்கா ஏ. எம். எக்ஸ் ஏ. லண்டன்
சட்டத்தரணி திரு. கே. என். சோக்சி

வியாபார நோக்கம்
முதலீட்டு வைப்பு, காணி கொள்வனவு, விற்பனவு, கைத்தொழில், இரத்தினக்கற்கள், சந்தைப்படுத்தல் போன்றவற்றுக்கு நிதி அளித்தல்

தொழிலாளர்களுக்கு பங்குகள்வழங்கிய இலங்கையின் முதலாவது பினான்ஸ் கம்பனி இதுதான்

| வருடம் | வழங்கப்பட்ட பங்கீட்டு முதல் | வருமான சேமிப்பு | முதலீட்டு சேமிப்பு | மற்றைய பற்று விபரம் | வரிவிதிப்புக்கு முன்னர் உள்ள முத லீட்டுவைப்பு | வரி விதிப்புக்கு பின்னர் உள்ள நிகர லாபம் | பங்கு லாபம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1973 | 1,200,000 | 1,038,278 | 2,195,700 | 771,277 | 92,070 | 82,070 | 5 |
| 1974 | 1,200,000 | 1,065,951 | 6,045,843 | 2,681,195 | 264,328 | 147,328 | 10 |
| 1975/76 | 1,200,000 | 1,215,706 | 15,400,043 | 9,106,588 | 361,480 | 361,480 | 7·5 |
| 1976/77 | 1,200,000 | 664,721 | 31,894,498 | 4,276,988 | 395,762 | 395,762 | 10 |
| 1977/78 | 1,200,000 | 1,698,335 | 41,203,537 | 3,974,723 | 167,532 | 167,582 | 10 |
| 1978/79 | 1,210,150 | 1,727,524 | 57,234,462 | 1,866,699 | 145,561 | 145,561 | 10 |

வட்டி வீதம்
தவணை வைப்புக்கணக்கு

| முதலீடு செய்யவேண்டிய தொகை | முதலீட்டுக் கால எல்லை | செலுத்தப்படும் வட்டி வீதம் | செலுத்தப்படும் வட்டி வீதம் |
|---|---|---|---|
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 12 மாதங்கள் | 20 % வருடம் | மாதம்/காலாண்டு |
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 24 மாதங்கள் | 22 % வருடம் | அரைவருடம்/ |
| ரூபா. 1,00,000/- அதற்கு மேலும் | 24 மாதங்கள் | 24 % வருடம் | வருடந்தோறும் |

புதிய அதிவிரைவான பயனளிக்கும் வைப்புக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 18 மாதங்கள் | 22 % வருடம் | உங்கள் முதலீடு |
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 24 மாதங்கள் | 25 % வருடம் | முதிர்ச்சிஅடைந்ததும் |
| ரூபா. 1,00,000/- அதற்கு மேலும் | 24 மாதங்கள் | 27 % வருடம் | முதலீடும் வட்டியும் செலுத்தப்படும் |

முதலீட்டுச் சேமிப்புகள்

| | | |
|---|---|---|
| ஆகக் குறைந்த முதலீடு ரூபா. 50/- | 24 மாதங்கள் | 15 % வருடம் |

* இந்த இலாபக்கணக்குகள் ஊழியர்களுக்கு இலாப ஊக்குவிப்புப்பணம் வழங்கியபின் உள்ள தொகையாகும்.

31-3-81வரை ரூபா 10கோடிக்கு மேல் நிலையான வைப்புத்தொகை

த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்
முன்றும் மாடி, சிலிங்கோ மாளிகை, கொழும்பு-1
கிளை: 249/C, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7680
மற்றும் 14 கிளைகள் நாடு பூராவும்.


# "பிக்கு மாணவர் நடத்தை வேதனைஅளிக்கிறது"

-- பிரதி அமைச்சர்

(களுத்துறை)

''வெள்ளை அறிக்கையை எதிர்த்து காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டஞ் செய்த சில பிக்கு மாணவரது நடத்தை மிக வேதனையைத் தருவதாக அமைந்துள்ளது.''

இவ்வாறு தோட்டத் துறை பிரதியமைச்சர் திரு. வி. எல். விஜயமான களுத்துறையிலுள்ள பௌத்த ஆலயமொன்றில் உரையாற்றுகையில் கவலை தெரிவித்தார்.

திரு. விஜேயமான அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், துரதிர்ஷ்டவசமாக அன்று பிக்கு மாணவர் நடந்துகொண்ட விதம் சாதாரண மனிதனையும் தலை குனியவைப்பதோடு பௌத்த சங்கத்துக்கும் இழுக்கைத் தேடித்தருவதாக உள்ளது.

பௌத்த சமயக் கல்வியைப் புகட்டும் 'பிரிவேனு' என்றழைக்கப்படும் சமயக் கல்வி நிறுவனங்கள் சிறந்த பௌத்த குருமார்களை உருவாக்கப் பெரிதும் உதவியுள்ளன. இத்தகைய கல்விப் போதனைகளை பிக்கு மாணவர்களுக்கு மீண்டும் வழங்கி அவர்களது உயர்ந்த தரத்தை மீண்டும் பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக பிரதியமைச்சர் மேலும் தெரிவித்தார். (கி)

## பெண் ஆசிரியர் தங்கும் அறை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் பெண் ஆசிரியர்கள் தங்குவதற்கெனச் சகல வசதிகளும் கொண்ட தங்கும் அறையொன்றை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கட்டப்பட்ட மேல்மாடிக் கட்டிடத்தின் கீழ் மாடியில் பெண் ஆசிரியர்களுக்கான மேற்படி தங்கும்அறையைசாவகச்சேரி வட்டாரக்கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா திறந்துவைத்தார்.

கல்லூரி அதிபர் பூ. வெற்றிவேலு தலைமையில் நடந்த திறப்புவிழாவில் திரு. தியாகராசா பேசுகையில் கல்லூரி ஆசியர்கள் கடின உழைப்பாளிகள். நல்ல பெறுபேற்றைப் பெற்றோர் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஆகவே இப்படியான வசதிகள் நிறைந்த இம் மண்டபத்துள் அதிகநேரம் காலங்கழிக்காது கடமைகளைத் திறம்படச் செய்யும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன் என்றார்.

மத்தியகிழக்கில் வேலைவாய்ப்பு:

# டிமிக்கிகொடுத்த ஆசாமி வகையாக சிக்கினாராம்

## பெப்ரவரி மாதம்வரை றிமான்ட்

(மட்டுவில்)

மத்திய கிழக்கு நாடுகளில் வேலைபெற்றுத் தருவதாக பளைப் பகுதியிலுள்ள நான்கு வாலிபர்களிடம் பெருந்தொகையான பணத்தைப் பெற்றுக்கொண்டு தலைமறைவானதாகக் கூறப்படும் ஒருவர் அந்த வாலிபர்களிடமே சிக்கிக் கொண்டாராம். அந்த வாலிபர்கள் அவரை யாழ். விசேட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவில் ஒப்படைத்தனர். இப்பொழுது அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு கொம்பனித் தெருவைச் சேர்ந்த அன்ரன் சேவயர் செல்வரத்தினம் என்ற நபரே, பளைப்பகுதியைச் சேர்ந்த நான்கு பேரிடம் பணம் பெற்றுக் கொண்டு மோசடி செய்ததாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் பளைப்பகுதியைச் சேர்ந்த நால்வரிடம் மத்திய கிழக்கு நாடுகளில் வேலை பெற்றுத் தருவதாக ரூபா 63,500 பெற்றுக்கொண்டு தலைமறைவாகினாராம் இந்த நபரைத்தேடி இந்த நால்வரும் நீண்டநாள் வலைவிரித்து வந்தனர். சில தினங்களுக்கு முன் இந்த நபர் எதிர்பாராமல் இந்த நால்வரிடமும் சிக்கிக் கொண்டாராம்.

இந்த நால்வரும் அவரை யாழ். விசேட குற்றத்தடுப்பு பொலிஸ் குழுவில் ஒப்படைத்தனர். மேற்படி பிரிவு பொலிஸ் சார்ஜன்ட் திரு. பிள்ளை அந்த நபரை சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜனாப் எம். எம். காரியப்பர் முன்னிலையில் ஆஜர் செய்தார். நீதிபதி அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டு விசாரணையை பெப்ரவரி மாதம் வரை ஒத்திவைத்தார்.

# வடக்கில் நாய்களைப் பிடிக்க கொழும்பு நிபுணர்கள்

[மட்டுவில்]

கொழும்பிலிருந்து சுகாதார திணைக்களம் [illegible]ான்கு வான்க[illegible]ில் நச்சு வாயு. நாய்பிடி உபகரணங்கள்சகிதம் நாய்பிடி நிபுணர்களை வடக்கே அனுப்பியுள்ளது.

வடக்கில் நாய்கள் மத்தியில் பரவும் விசர் நோயைத் தடுப்பதற்கு, இதுஒரு நடவடிக்கையாகும்.

வடக்கில் நாய்களுக்கு விசர் நோய் பரவி வருவதாகவும், இதனால் விசர்நாய்க் கடியும் அதிகரித்து வருவதாகவும், விசர்நாய்க் கடிகளையும் நாய்க்கு ஏற்படும் விசர் நோயையும் தடுக்க, சுகாதார திணைக்களம், வைத்திய அதிகாரி டாக்டர் குருநேருவையும் இங்கு அனுப்பிவைத்துள்ளது.

நாய்க்கு விசர்நோய் தடுப்பு ஊசி போடும் சேவையை விஸ்தரிக்கும்படி சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி,சாவகச்சேரி நகர பிதா ஆகியோர் டாக்டர் குருநேருவைக் கேட்டுக்கொண்டதைத்தொடர்ந்து பெப். 8ம் திகதி முதல் 12ம் திகதி வரை சாவகச்சேரியில் 12 நிலையங்களில் நாய் விசர் தடுப்பு ஊசி போடப்படவிருக்கின்றது.

நாய்ச் சொந்தக்காரர் குறிப்பிட்ட நிலையங்களுக்குச்சென்று ஊசியைப் போடுவித்து ஒத்துழைப்புக் கொடுக்கும்படி நகரசபை சுகாதார பரிசோதகர் திரு. எஸ். செல்வபாஸ்கரதுரைநாயகம் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கண்டபடி திரியும் நாய்களை கொழும்பிலிருந்து வந்தவர்கள் பிடிப்பதற்கும் பொது மக்கள் ஒத்துழைப்புக்கொடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

விசர்நாய்க் கடியினால் ஏற்படும் ஆபத்துக்களை விளக்கும் ஒரு திரைப்படக் காட்சியும் யாழ்ப்பபணம் — சாவகச்சேரி ஆகிய இடங்களில் காட்டப்படவுள்ளது.

## புதியசோனகத் தெரு முன்னேற்றச் சங்கம்

[யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புதிய சோனகத் தெரு முன்னேற்றச் சங்க நிர்வாகிகளாக ஆறுபேர் கொண்ட நிர்வாகக் குழு ஒன்று ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தெரிவு விபரம் வருமாறு;

போஷகர் ஜனுப் எஸ். எம். ஹனீபா தலைவர் ஜனுப் எஸ். எஸ். ஏ. ஸி. ஜமால்டீன் உபதலைவர் ஜனுப் எம். எஸ். நுஹ்மான், காரியதரிசி ஜனுப் எம். எஸ். ஹிதாயா உபகாரியதரிசி ஜனுப் ஆர். மௌசூக் தனதிகாரி ஜனுப் கே. எம். நஜ்முதீன் ஆறு பேரைக் கொண்டசெயற்குழு வொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## "சமயப்பிரசாரம் செய்ய இளைஞர் முன்வரவேண்டும்"

(மண்டூர்)

"ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்ஸர் விவேகானந்தர் போன்ற பெரும் போதகர்களின் உயர்லட்சியங்களை மக்களுக்கு தாரளமாக எடுத்துக் கூற இளைஞர் முன்வருதல் அவசியம் அதர்ம சிந்தனைகள் பெருகிவரும் உலகில் ஆன்மீக 'சிந்தனையைப் பரப்ப வழிகாணப்படுதல் வேண்டும். என்று மட்டக்களப்பு மண்டூர் ஸ்ரீ. இராமகிருஷ்ண மன்றத்தின் அமைப்பாளர் திரு. செழியன் ஜே. பேரின்பநாயகம் கூறினார்.

மண்டூர் ஸ்ரீஇராம கிருஷ்ண மன்றத்தின் வருடாந்தக் கூட்டம் மன்றப்பணிமனையில் தலைவர்திரு.சீ, மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது. அமைப்பாளர் திரு. செழியன் ஜே. பேரின்பநாயகம் உரையாற்றுகையில் வங்கம் பல தங்கச்சிங்கங்களை உலகுக்கு ஈந்து உவகை கொண்டிருக்கிறது. அவர்களில் ஒருவர் ஸ்ரீ. பரமஹம்ஸதேவர் "நல்லதை நினை - நல்லதை செய்" என்று போதித்த மகான். மனித குலத்தை உய்விக்க ஸ்ரீபரமஹம்ஸர் போன்ற மகான்கள் போதித்த போதனைகள் இன்று உலகுக்கு மிக மிகத்தேவை. இதனை மனதில் கொண்டு எழிமுச்சியோடு ஆன்மீக வழியில் மக்களை இட்டுச்செல்ல கூடியதாக ஸ்ரீஇராமகிருஷ்ண மன்றம் போன்ற சமய அமைபுகளின் அங்கத்துவ இளைஞர்கள் முன் வருதல் வேண்டும் என்றார்.

மண்டூர் ஸ்ரீஇராமகிருஷ்ண மன்றத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை பாரதி நூற்றாண்டு விழாவாக இணைத்துக் கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டது, மன்றத்தின் போஷகர் திரு. பரமானந்தம் உட்பட பலர் உரையாற்றினர். புதிய நிர்வாகிகள் வருமாறு அமைப்பாளர் திரு. செழியன் ஜே. பேரின்பநாயகம் தலைவர் செ. விவேகானந்தம், செயலாளர் த. சிவசூரியமூர்த்தி, உபசெயலாளர் லெஸ்லிநிஹால் பொருளாளர் க.சிவகுமார் உப பொருளாளர் செ. புஷ்பானந்தம் அறுவர் கொண்ட செயற்குழுவும் தெரிவாகியது.

## "பட்ஜட்டில் கூறப்பட்ட சம்பள உயர்வை உடன் வழங்குக"

(பண்டத்தரிப்பு)

"கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கம் அறிவித்திருந்த சம்பள உயர்வுப் படிகளை சகல சங்கப் பணியாளர்களுக்கும் வழங்குவதற்கு ப. நோ. கூ. சங்க நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்"

இவ்வாறு பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவரை கேட்டுக்கொள்ளும் முக்கிய தீர்மானம் ஒன்று இலங்கை வர்த்தக ஊழியர் சங்க பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளையின் ஆறாவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. கிளையின் தலைவர் திரு. செ. யொ. அலோசியஸ் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

புது வருட நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றபோது பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: செ. யொ. அலோசியஸ், உப தலைவர்: க. சுப்பிரமணியம், செயலாளர்: க. புவனேஸ்வரன், உப செயலாளர்: செல்வி எஸ். ஆர். குலேஸ்வரி, பொருளாளர்: திருமதி ம. லூர்த்தம்மா. செயற்குழு உறுப்பினராக நான்குபேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## நவீல்ட் பாடசாலையில் நோர்வே பிரமுகர்கள்

### இலங்கை - நோர்வே நட்புறவுக்கு ஆசி

(மட்டுவில்)

"இலங்கைக்கும் நோர்வேக்குமிடையில் நட்பை வளர்க்கும் ஒரு அன்புப் பாலமாக அமைந்துள்ளது கைதடி செவி விழிபுலனிழந்தோர் பாடசாலையான நவீல்ட் பாடசாலை. இப்பாடசாலையின் கல்விச்சேவை என்றும் நிலைத்திருக்கவும், இங்கு சமாதானம் நிலவவும் இறையருள் பாலிக்கப் பிரார்த்திக்கிறேன்"

இவ்வாறு நோர்வே சேமிப்பு வங்கிகள் கழகத்தலைவர் திருமதி ஜொரூன் லியுனும், திட்டமிடல் அமுலாக்கல் தலைவர் திரு. லீவ்—ரோர் லாங்மயரும், கைதடி நவீல்ட் பாடசாலையில் செவிப்புலனிழந்த மாணவியர்களுக்கான விடுதியை (நோர்வே இல்லம்) மங்கள விளக்கேற்றி திறந்து வைத்து, அதன் சுவரில் நிலைக் கல்லையும் பொறித்து வைத்த போது ஆசி வழங்கினர்.

சுமார் 4 லட்சம் ரூபா செலவில் நோர்வே சேமிப்பு வங்கிகள் கழகம் இப்புதிய கட்டிடத்தை அமைத்து அன்பளிப்புச் செய்துள்ளது. இதைத் திறந்துவைக்க, நோர்வேயிலிருந்து இத் தலைவர்கள் பிரதம விருந்தினர்களாக இங்கு வந்திருந்தனர். சேமிப்பு வங்கிகள் கழகத் தலைவர் திருமதி ஜொரூன்லியுன் மங்கள விளக்கேற்றி, நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். திட்டமிடல் அமுலாக்கல் தலைவர் திரு. லீவ்—ரோர் லாங்மயர் விடுதி சுவரில் நிலைக்கல்லை நாட்டிவைத்தார்.

திருமதி ஜொரூன்லியுன் தனதுரையில் தொடர்ந்து கூறியதாவது: "இப்பாடசாலை அதிபர் திரு. டேவிட் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கி நோர்வேயில் உள்ள 330 சேமிப்பு வங்கிகளிடம் எழுத்துமூலம் கோரியிருந்தேன். சகல வங்கிகளும் இச் சேவையைச் செய்ய விரும்பிய போதும். அதற்கு சட்டம் இடம்கொடுக்கவில்லை. உள்ளூரில்மட்டும் உதவி கொடுக்கவே சட்டம் இடம் கொடுத்தது. இருந்தும் 79 சங்கங்கள் உதவின. எமது சேமிப்பு வங்கிகளின் ஊழியர்கள் உதவினார்கள். எமது கழகம் மனிதப் பொம்மைகளைச் செய்து விற்றும் இப்பணத்தை சேகரித்தது. அவர்களின் பேருதவியினாலேயே இன்று இந்த திறப்பு விழா நடக்கிறது

சுவர் நிலைக்கல் நாட்டிவைத்த லீவ்—ரோர்—லாங்மயர் பேசுகையில் நிலைக்கல் நாட்டும் பண்பில் எமது நாட்டிற்கும் இந்த நாட்டிற்கும் வேறுபாடில்லை. ஆனால் சம்பிரதாயத்தில் மட்டும் வித்தியாசம் எண்டு. ஆகவே எங்கள் நாட்டுசம்பிரதாயப்படியேஇதனைச்செய்கிறேன்இந்தஉண்டியலில் சில நாணயங்களைப் போட்டு, விடுதியின் வரைபடத்தையும், எமது நாட்டு மக்களின் அன்பளிப்பு வாழ்த்து மடல்களையும், எமது நாட்டின் சமாதானச் சின்னமான வெள்ளிப் பதக்கம் ஒன்றையும் வைத்துப் புதைக்கிறேன் என்றார்.

அதிபர் திரு. டேவிட் தலைமையில் நடைபெற்ற இந்த விழா கிறிஸ்தவ கலாச்சாரப்படி வண பிதாக்களின் பிரார்த்தனையுடன் நடைபெற்றது. இதில் திரு. கு. நேசையா, யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஜே.துரைராஜா உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

பாடசாலை மாணவர்களின் கலை, கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## ஏழை மாணவர்...

(3 ம் பக்கத்தொடர்ச்சி)

இலவச பாடப்புத்தங்களை விநியோகிக்கத் தொடங்கி இரு ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டதெனவும் ஜனாதிபதியின் இத்திட்டம் மிகவும் போற்றத்தக்கது என்றும் மாணவர்கள் புத்தகங்களை கவனமாகப் பேணிப் பாதுகாப்பதுடன் கல்வியிலும் ஊக்கங்காட்ட வேண்டுமென்றும் கூறினார்.

திரு. எஸ்.எம்.நவரத்தினம் தமது உரையில் இலவசப் பாடப்புத்தக விநியோகத்தினால் மாணவர்கள் பெறும் நன்மைகளையும் இத்திட்டத்தின் பயன்களையும் விளக்கிக் கூறினார் திரு. ம. சரவணபவசர்மா தமது உரையில் கல்வியின் நோக்கம் நிறைவேற, ஏழைமாணவர்கள் பயன் பெற இத்திட்டம் பெருவாய்ப்பாக அமைந்துள்ளது என்று கூறினார். திரு. க.கந்தசாமி நன்றி கூறினார்.

## தூரஇடத்து பஸ்கள் சகல பஸ்தரிப்பு நிலையங்களிலும் நிறுத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

தூர இடங்களிலிருந்து யாழ்ப்பாணம் வரும் கடுகதி உட்பட சகல பஸ்களும். யாழ் மாநகர எல்லைக்குள்ளிருக்கும் எல்லா பஸ்தரிப்பு நிலையங்களிலும் நிறுத்தப்படும். பிரயாணிகளின் நலன் கருதியே இப்புதிய திட்டம் உடனடியாக அமுலுக்கு வருகிறது என்று யாழ். மத்திய பஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.


எல்லா இடங்களிலும் பலதரப்பட்ட விலை;
ஆனல் அம்பலவாணர் அன் சன்ஸ் நிறுவனத்தில் நிதான விலை.
மின்சார உபகரணங்கள் - காகிதாதிகள்,
அலங்கார அன்பளிப்புப் பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள், அப்பியாசக் கொப்பிகள்.

அம்பலவாணர் அன் சன்ஸ்

196, கே. கே. எஸ். வீதி, (போன்: 8291) யாழ்ப்பாணம்.

பேர்ள் லைட்ஸ், 78, மலிபன் வீதி, கொழும்பு 11. போன்: 24821 — 28244.

அம்பலவாணர் சன்ஸ் 78, மலிபன் வீதி, கொழும்பு—11

லெட்சுமி பவான், 97, ஓல்ஹொட் மாவத்தை, கொழும்பு — 11.

8 வது [illegible] வாரம்
ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ஸ்ரீதேவி
நீல மலர்கள்

வெஸ்லி மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.30
பட்டாக்கத்தி
பைரவன்

Regal Cinema
(Jaffna) Tele. 360.
தினசரி 10—30, 2—15, 4—30, 7—00, 9—30
Today only
COCK FIGHTER
(Color)

12 - 2 - 82
முதல்
தனிமரம்

ராணி (யாழ். நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
இந்தியாவில் 100 நாட்களுக்குமேல் ஓடிய
வெற்றிச்சித்திரம்
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

இன்னும் சிலதினங்கள் மட்டும்
மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10—30, 2—30, 6—30, 9—30
சிவாஜி—கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்

வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
சுதாகர், ராதிகா நடித்த
அன்னப்பறவை

ஸ்ரீதர் 3—2—82 வரை
யாழ். நகர் தினசரி: 10:30, 2:30, 6:15, 9:30
கமலஹாசன் ஸ்ரீபிரியா
சட்டம் என் கையில்
(புதிய பிரதி)
4—2—82 முதல்
பட்டிக்காடா பட்டணமா

சாந்தி (யாழ். நகர்) 10—30, 2—30, 6—15, 9—45
136வது வெற்றித் தினம்
கமல் ஸ்ரீதேவி
குரு
அநேகரின் வேண்டுதலுக்காக சில தினங்கள் மட்டும்!

ராஜா (யாழ். நகர்)
சரஸ்வதி [திருமலை]
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீதேவி—சக்கரவர்த்தி—லட்சுமிஸ்ரீ
தர்ம யுத்தம் (ஈஸ்ட்மன் கலர்)

WINDSOR
(JAFFNA)
Daily 5 Shows
Grand Gala Release
'Airport '80 - The Concorde'
Starring : Alain Delon. George Kennedy
Susan Blakely

இரு மடங்கு ஒலி வேகத்தில் செல்லும் 'கொங்கோட்' விமானம் பாரிஸ் நகரத்திற்குத் தனது கன்னிப் பயணத்தைத் தொடங்குகின்றது. அதிவிசேஷ பயிற்சி, அனுபவம், ஆற்றல் மிக்க விமானிகள் அதைச் செலுத்துகின்றார்கள். திடீர்த் தாக்குதலினால் பிரயாணிகளின் உயிர்கள் ஊசலாடுகின்றன. விமானிகள் எப்படி இதைச் சமாளிக்கின்றார்கள் என்பதை வெண்திரையில் காண்க.

## வளர்ந்தோர் கல்வி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தின் மகளிர் குழு அங்கத்தவர்களின் கருத்தரங்கு இன்று நடைபெறும்.

திட்ட அமுலாக்கல் அமைச்சின் ஆதரவில் யாழ். மாவட்ட வளர்ந்தோர் கல்விப் பிரிவும் யாழ். மாவட்ட போஷாக்கு கல்விப் பிரிவும் இணைந்து நடத்தும் இக்கருத்தரங்கில் எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நல்லூர் ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. என். அருணாசலம் தலைமையில் நடக்கும் கருத்தரங்கில் யாழ். அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையா, கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம், யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

## வீணை இசை விமர்சனம்

27. 1. 82 புதன்கிழமை ஈவ்லின் இரத்தினம் நினைவு பல்லினப் பண்பாட்டியல் நிறுவன அரங்கில் நடைபெற்ற திருமதி யோகநாயகி தணிகாசலம் அவர்களது வீணைக் கச்சேரியைக் கேட்டு ரசித்தவர்களை அதிர்ஷ்டசாலிகள் எனலாம். சென்னை நகரத்தில் சிறிய அளவான ரசிகர்களைக்கொண்ட சபாக்களில் நடைபெறும் இசைக் கச்சேரிகளைப் போன்ற சூழ்நிலை. மைக் இன்றி, வீணையின் துல்லியநாதம் செவிக்கு நல் விருந்தது. 50 பேர் அளவில் தரையில் உட்கரர்ந்து எவ்வித இடையூறுமின்றி உயர்தர இசையை ரசித்துச்சென்றமை சென்னை சங்கீத சபாக்களுக்கு எம்மவர்கள் எதுவித்திலும் குறைந்தவர்களல்ல என்பதை நிருபித்தது.

பேகடவர்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்ட கச்சேரி ஆரம்பத்திலேயே களை கட்டியது. மோகனராக ஆலாபனை கச்சிதம். பைரவியின் ராக ஆலாபனை, தானம், ஸ்வரப்பிரயோகங்கள் மிகநன்று. வீணைக்கே உரித்தான கமகங்களும், ராகரஞ்சகப் பிரயோகங்களும் சரளமாக இடம் பெற்றன.

''ப்ரோசேவா ரெவருரா'' கமாஸ்ராகக் க்ருதி சமீபகாலமாக எமது நாட்டில் மிகப் பிரபலம். அன்று ரசிகர்கள் அதனை உணர்ந்து ரசித்தனர்.

தொடர்ந்த கல்யாணி ராகம், தானம் எடுத்துக் கொண்ட உருப்படிபோன்றவை வீணை இசையை இவர் கற்பதற்கு உழைத்த உழைப்பின் பிரதிபலனை வெளிப்படுத்தியது. கமலாம்பாம் பஜரே வாய்ப்பாட்டில் எப்படி பாவமாக இருக்குமோ அதேபோன்று வீணையிலும் இருந்தது போற்றத்தக்கதே. திருமதி யோகநாயகி தணிகாசலம் அவர்கள் ஈழத்து சிறந்த வீணை வித்தகர்களில் ஒருவராக மிளிருவதை அன்றைய கச்சேரி வெளிப்படுத்தியது.

பக்கவாத்தியம் வாசித்த திரு. ஏ. எஸ். ராமநாதன் மிகமிருதுவாக வீணைக்கேஉரிய அடக்கத்துடன் வாசித்தமை போற்றத்தக்கது. செல்வன் ஜோகராஜா கடம்வாசித்து சிறுவயதிலேயே தனது ஞானத்தை வெளிப்படுத்தினார்.

ஈவ்லின் இரத்தினம் நினைவு நிறுவனத்தில் மாதாந்தம் நடைபெறும் சொற்பொழிவுகளுக்கு மத்தியில், அடிக்கடி இப்படிப்பட்ட இசைநிகழ்ச்சிகள் நடைபெறுவது மிக மாறுதலாகவும், உயர்தர சங்கீதத்தை உயர்கலை ரசனைமுறையில் ரசிக்கவும் இடமளிக்கிறது.

- ''ரசிகப்பிரியா''

## கவின் கலை மன்ற வாராந்த நிகழ்ச்சி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தின் மாணவர்களினால் அமைக்கப்பட்டுள்ள கவின்கலை மன்றத்தினர் நுண்கலைப் பிரிவு மாணவர்களின் வளர்ச்சி கருதி வாராவாரம் கச்சேரிகளையும் கருத்தரங்குகளையும் விமர்சனக் கூட்டங்களையும் நடாத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். இதன்படி இவ்வருடத்தின் முதல் நிகழ்ச்சியாக டாக்டர் ஜே. கங்காதரனின் புல்லாங்குழல் கருத்தரங்குக் கச்சேரியை பெப்ரவரி மாதம் 1ம் திகதி நுண்கலைப் பீடத்தில் நடாத்தவுள்ளனர்.

## கர்நாடக சங்கீத, நடனப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப்பீட கவின் கலை மன்றம் நுண்கலைப்பீட மாணவர்களுக்கிடையே கர்நாடக சங்கீத, நடனப் போட்டிகளை நடாத்தவுள்ளது. இப்போட்டிகள் பெப்ரவரி மாதம் 6ம், 7ம் திகதிகளில் நுண்கலைப் பீடத்தில் நடைபெறவுள்ளது. போட்டிகள் வாய்ப்பாட்டு, வயலின், பண்ணிசை, வீணை, பரதநாட்டியம், கதகளி நடனம் ஆகிய துறைகளில் நடைபெறும். இப்போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

## பஸ் நிலையத்தில் தடைஉத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய பஸ்நிலைய எல்லைக்குள் சைக்கிள் உட்பட சகல ரக வாகனங்களும் நிறுத்தப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

## தனியாரிடம் கையளிக்க தீர்மானம்

[பண்டத்தரிப்பு]

பண்டரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உடை தயாரிக்கும நிலையம் தனியார் துறையினரிடம் ஒப்பந்த அடிப்படையில் விரைவில் கையளிக்கப்படவுள்ளது. இதுபற்றிய தீர்மானம் ஒன்று சங்கத் தலைவர் திரு. எஸ். இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற இயக்குனர் சபைக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கான அங்கீகாரத்தை கூட்டுறவு உதவி ஆணையாளரிடமிருந்து பெற்ற பின்னர் கடந்த சில வருடங்களாக நஷ்டத்தில் இயங்கி வரும் இந்த உடைதயாரிக்கும் நிலையத்தை தணியார்துறையிடம் ஒப்பந்த அடிப்படையில் சில வருடகாலத்திற்கு ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

## திருமண அழைப்பு

நிகழும் துர்மதி வருடம் தை மாதம் 24ம் திகதி (6-2 82) சனிக்கிழமை பகல் 11 மணி முதல் 1 மணி வரையுள்ள இடப லக்கின சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எனது புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>**சத்தீஸ்வரன்**<br>(இரசாயன கூட மேற்பார்வையாளர், சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை.) | எமது புத்திரி<br>திருநிறை செல்வி<br>**சுபாஷினி** |

மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமணவைபவத்திற்குச் சமூகமளித்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு உற்றூர் உறவினர் நண்பர்களனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

**திருமதி ந. தம்பையா**
''சத்தியகிரி''
மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பழை.

**நா. சண்முகமும்**
(உதவி ஆணையாளர்,
உள்நாட்டு வர்த்தகம்,
மட்டக்களப்பு)
பாரியாரும்,
108, பிறவுண் வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(2144)

## திருமண அழைப்பு

மணமகன்
**செல்வன்**
**எஸ். இராமச்சந்திரன்**
[டாக்டர் **K.S.S.** சர்மாவின் மகன்]

மணமகள்
**செல்வி**
**மாதங்கி**
(யா/ நடேஸ்வராக்கல்லூரி, யாழ்ப்பாணம்.
இந்துக்கல்லூரி முன்னாள் ஆசிரியர்
திரு. **E S**. கிருஷ்ணசுவாமி **B.Sc.**
திருமதி மீனும்பாள் கிருஷ்ணசுவாமி
ஆகியோரின் மூத்தமகள்)

காலம்: துர்மதி ஆண்டு தைத் திங்கள் 21 ஆம் நாள் (3—2—82) புதன்கிழமை காலை 8-30 மணி தொடக்கம் 10-30மணிவரையுள்ள நல்வேளை.

இடம்: ஜெயின் பவன்
ஜாபர்ஸா தெரு,
திருச்சி 8.

**JAIN BHAVAN**
**51, JAFFARSA STREET,**
**TRICHY-8.**

உற்றூர், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்பத்தோடு வருகை தந்து மணமக்களை வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

டாக்டர் **K. S. S.** சர்மா,
மதுரை.

**F. S.** கிருஷ்ணசுவாமி
மீனும்பாள் கிருஷ்ணசுவாமி
**41, PANDAMANGALAM**
**AGRAHARAM**
**WORYUR, TRICHY—3.**

2146

## கேள்வி விளம்பரம்

### லொறி விற்பனை இசூசு மொடல் 24 ஸ்ரீ 8495

மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணம் ரூபா 2000/- வைப்புச் செய்து ரூபா 5/—செலுத்தி கேள்வி விண்ணப்பப்படிவத்தைப்பெற்று 15.02.82க்குமுன் தலைவர், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**பொதுமுகாமையாளர்**

புலோலி பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.
1982—01—19. 2056

---

### விற்பனைக்கான கேள்விப் பத்திரம் கோரல்

## புலோலி சினிமா தியேட்டர்

புலோலி சினிமாஸ் கட்டிடம், யந்திரங்கள், தளபாடங்கள், உபகரணங்கள் ஆகியன விற்பனை செய்ய கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது. கேள்விப் பத்திரங்கள் யாவும் 15 — 02 — 1982 பிற்பகல் 5.00 மணிக்கு முன்னதாக தலைவர், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் கிடைக்கச் செய்யவேண்டும்.

மேலதிக விபரங்களுக்கும், கேள்வி விண்ணப்பப் பத்திரங்களுக்கும் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**பொதுமுகாமையாளர்**

புலோலி பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.
1982—01—19 2055

---

# வரி விளம்பரம்

### வாடகைக்கு

யாழ். நகரின் மத்தியில் ரியூட்டரி நடத்த இடவசதி உண்டு. விபரங்களுக்கு: 6, பிரதானவீதி, பருத்தித்துறை. 2127

### தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் சவர்க்காரத் தொழிற்சாலைக்கு அனுபவமிக்க விற்பனைப் பிரதிநிதி தேவை. அனுபவம் முதலியவற்றுடன் விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும் விளம்பர இல: 2078, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 2078

நவீன முறையில் அமையப்பெற்ற சைவ ஹோட்டலுக்கு சகல ஊழியர்களும் தேவை. 8—2—82க்கு முன் நேரில் சமுகம் அளிக்கவும். ஸ்ரீ அம்பாள் சைவ ஹோட்டல் அன்ட் பேக்கரி, ஸ்டேசன் வீதி, மாங்குளம். 2137

வயது வந்த இரண்டு பிள்ளைகளுக்கு சமையற்கலை, தையற்கலை கற்றுக் கொடுப்பதற்கு அனுபவமுள்ள (பெண்) திறமைசாலிகள் தேவை. எதிர்பார்க்கும் சம்பளம், தகைமை முதலியவற்றுடன் விண்ணப்பிக்கவும். திறமைக்கேற்ப சம்பளம் கொடுக்கப்படும். விளம்பர இல: 2142, மே/பா ''ஈழநாடு'', யாழ்ப்பாணம். 2142

யானை மார்க் குளிர்பானங்கள் ஏற்றி இறக்கி வியாபாரம் செய்யக்கூடிய வியாபாரிகளும் (Sales Men), சோடாப்பெட்டி ஏற்றி இறக்கக்கூடய கூலியாட்களும் தேவை. விண்ணப்பிக்க: விளம்பர இல: 2145, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 2145

யாழ்ப்பாணத்தைப்பிறப்பிடமாகவும் உயர்ந்த வேளாள குடும்பத்தைச் சேர்ந்த குடிப்பழக்கம் இல்லாதகொழும்பில் வசிக்கும் கட்டிட மதிப்பாளருக்கு (Quantity Surveyor) பெற்றோர் பெண் தேடுகின்றார்கள். பெண் அழகானவராகவும் வயது 27 முதல் 33 வரையுள்ளவராகவும் இருக்க வேண்டும். குடும்ப விபரம் உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 2091, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 2091

### விற்பனைக்கு

திருநெல்வேலி கந்தர்மடத்தில் $2\frac{1}{4}$ பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கு. மதியாபரணம், 6ம் ஒழுங்கை பலாலி வீதி, திருநெல்வேலி. 2141

தண்ணீர் வசதியுள்ள வீட்டுடன் கூடிய இரண்டரைப் பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: M. சுந்தரம், தாவடிச் சந்தி, கொக்குவில். 2140

L. O. டீசல் வானுக்குரிய என்ஜினும், C/90 ஹொண்டா 'செல்வ்ஸ்ராட்டர்' மொடல்களும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: நா. சாம்பசிவம் அன் கோ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 2139

மானிப்பாய்—உடுவில் வீதியில் றேஸ் பிராண்ட் ரொபி தொழிற்சாலைக்கு முன்பாக $3\frac{1}{2}$ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: இ. இரத்தினராஜா, மானிப்பாய் வடக்கு, மானிப்பாய். 2120

மாங்குளம் புகையிரத நிலையத்திற்கு அண்மையிலும், யாழ். கண்டி வீதிக்கு அருகிலும் (மூன்று முறை பயிர்ச் செய்கை செய்த) மிளகாய், நெல் செய்கை பண்ணக்கூடிய ஐந்துஏக்கர்காணி (கொட்டப் புளியங்குளத்தில்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வைத்தியர் சாம். த. சொலமன்ஸ் J. P., 3/1, கச்சேரி லேன், சுண்டிக்குளி. 2119

பளை, இயக்கச்சியில் $68\frac{1}{2}$ ஏக்கர் தென்னந்தோட்டம் இருபிரிவுகளாக50உம், $18\frac{1}{2}$உம் உண்டு. L.R.C.யினல் அனுமதிக்கப்பட்டுள்ளது. இளம் தென்னம்பிள்ளைகள் காய்க்கத் தொடங்கிவிட்டன. கல்வீடும் உள்ளது. வாகனங்கள் செல்ல தார் றோட்டு கண்டி வீதிக்கு அண்மையில் அமைந்துள்து. தொடர்பு: 65,பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். 2093

### பயிற்சி

எந்த நாட்டிலும் இலகுவான முறையில் பெணகள் வேலை வாய்ப்பைப் பெற மின்னியல் ''தையல் பயிற்சி''யும் யூக்கி மெசின் பயிற்சியும் ஆரம்பம்: 2—2—82 பயிற்சிகாலம் ஒரு மாதம் நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2135

சினிமா ஒப்பறேற்றர் (Operator)வேலை பழகவிரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். மிகக் கெதியில் நல்லமுறையில் பழக்கிக் கொடுக்கப்படும். மனேச்சர், லிபேட்டி சினிமா, அச்சுவேலி. 2136

ஒரு மாத எலக்றிக்கல் வயரிங் பயிற்சி, வெல்டிங் பயிற்சி 03.02.82 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்ெனொலொஜி, 9., ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2116

### வகுப்பு

டிப்ளோமாப் பயிற்சிபெற்ற நடன் ஆசிரியையினல் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்குப் நடன வகுப்பிற்கு தைப்பூசம் (7—2—82) அன்று பிற்பகல் 4 மணிக்கு புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். விபரங்கட்கு: 23, கடைச்சாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். 2131

---

## காணிகள் விற்பனைக்கு

(1) தெல்லிப்பளை கிழக்கு — ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம், கூட்டுறவு வைத்தியசாலை ஆகியவற்றிற்கு அருகாமையில்—பிரதான வீதியிலிருந்து இரண்டாவதாகவும், வடக்கே அளவெட்டி றோட்டை முகப்பாகவும் கொண்டு, நிந்தமான கிணற்றுடன் அமைந்துள்ள எட்டுப் பரப்புக்காணி. அதி உயர்ந்த விலை கோருபவர்களுக்கு விற்கப்படும்.

(2) மயிலிட்டி, தெற்கு—கட்டுவன் மயிலிட்டி றோட்டை முகப்பாகக் கொண்டு அமைந்துள்ள 30 பரப்புக்காணி கட்டுவன் சந்தியிலிருந்து கால் மைல் தூரத்திலுள்ளது. அதி உயர்ந்த விலை கோருபவர்களுக்கு விற்கப்படும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்:

**செல்வி யோகமலர் சிதம்பர உடையார்,**
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்.
37/4, தெமட்டக்கொடை பிளேஸ்,
கொழும்பு—9.

அல்லது பெப்ரவரி 6ம் திகதிக்குப்
பின்னர் நேரில் கந்திக்க:

**திரு. சே. சிதம்பர உடையார்,**
பிரதான வீதி,
தெல்லிப்பளை கிழக்கு.
2125

---

## பெருந் தெருக்கள் திணைக்களம்

### கேரதீவு - சங்குப்பிட்டி பாதை சேவை

கேரதீவு—சங்குப்பிட்டி படகுப் பாதையில் அவசிய திருத்தங்கள் செய்யவேண்டி இருப்பதால் இப்பாதை சேவை 01—02—1982ம் திகதி முதல் ஒருவாரத்துக்குத் தற்காலிகமாக இடைநிறுத்திவைக்கப் பட்டிருக்கும்.

**எஸ். பாலேந்திரா**

பிரதம பொறியியலாளர் (H)
யாழ்ப்பாணம்.
28—01—82.
2124

---

### கட்டிடங்கள் கட்டுவதற்கான

## கேள்வி கோரல்

எமது ஆலைகள் அமைந்திருக்கும் கோண்டாவில் வளவிற்குள் பின்வரும் கட்டிட வேலைகளைச் செய்வதற்கு ரூபா 5,00,000/ ற்குக் குறையாத வேலைகளைப் பொறுப்பேற்றுச் செய்வதற்குப் பதிவு செய்யப்பட்ட கட்டிடஒப்பந்தகாரர்சளிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

(1) 10, 000 கலன் தண்ணீர் கொள்ளக்கூடிய தண்ணீர்த் தாங்கி.

(2) 80 அடி 30 அடி விஸ்தீரணத்தில் பதனிடும் ஆலைக் கட்டிடத்தின் விஸ்தரிப்பு வேலைகள்.

இவற்றிற்கான விண்ணப்பப் படிவங்களை மீளளிப்புச் செய்யப்படாத வைப்பாக ரூபா 25/- செலுத்திச் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் 1—2—82 தொடக்கம் 10—2—82 வரை வேலை நாட்களில் காலை 9-00 மணிக்கும் பிற்பகல் 4—00 மணிக்குமிடையில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொருவேலைக்கும் தனித் தனிப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப் படல் வேண்டும்.

குறிப்பிட்டவேலைகளுக்கான அளவுத் திட்டம், வரைபடம் ஆகியவற்றை எமது காரியாலயத்தில் பார்வையிடலாம்.

அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 15—2—82 பி. ப. 3—00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப் படல் வேண்டும்.

தபாலுறையின் இடது பக்க மூலையில் தண்ணீர் தாங்கிக் கான/பதனிடும் ஆலைக்கட்டிட விஸ்தரிப்பு வேலைக்கான கேள்வி எனக் குறிப்பிடப் படல் வேண்டும்.

**பொதுமுகமையாளர்**

யாழ். மாவட்ட புடவை
நெசவாளர் கூட்டுறவுச்சங்கம்
10/1, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
31—1—82. 2122

---

## 300 பேர் மீது வழக்கு

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் விவசாயக் கடன்பெற்று கடந்த ஐந்து ஆண்டு காலமாக தமது கடன் பணத்தை திருப்பிச் செலுத்தாமல்இருக்கும் சுமார் 300 பேர் மீது சங்க நிர்வாகம் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

---

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

---

### இலவச...

(2ம் பக்கத் தொடர்ச்சி)
கங்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு மீண்டும் மாணவர்களால் ஒப்படைக்கப்பட்டிருப்பது மாணவர்களின் பொதுசொத்துக்களை பேணும் மனப்பான்மையை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது என்று கல்லூரி அதிபர் திரு. வி. நாகராசா புதிய இலவச புத்தகங்களை மாணவர்களுக்கு வழங்கும் வைபவத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

**மகளிர் கல்லூரியில்**

இலவச பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்ட இரண்டாவது ஆண்டு நிறைவு விழா கடந்த 28ம் திகதி வியாழக்கிழமை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் கொண்டாடப்பட்டது. பாடசாலை அபிவிருத்திச் சங்க உபதலைவரும் ஓய்வு பெற்ற பாடசாலை அதிபருமான திரு. எஸ். செல்லத்துரை இவ் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். கல்லூரி அதிபர் திருமதி கலாவல்லி ஆறுமுகதாசன் இலவச மாடப் புத்தகங்களை மாணவிகளுக்கு வழங்கினர்,

### யாழ்.பஸ்..

2ம் பக்கத் தொடர்ச்சி)
தியீனங்கள் ஏற்படும் என்ற காரணத்தினல் எமது அலுவலர்கள் சபைமட்ட நடவடிக்கைகளையேமேற்கொண்டனர். ஆயினும் இந்நிலையை மேலும் நீடிக்க அனுமதிப்பது உசிதமல்ல என்ற திடமான முடிவிற்கு நானவந்துள்ளேன். எனவே இனிமேல் பருவச் சீட்டுக்களைத் தவருகப் பிரயோகிப்பவர்கள் சட்டத்தின் கரங்களுக்குள் கொண்டுவரப்படுவர். எனவே உங்கள் பருவகாவச் சீட்டுக்களை எவ்விதத்திலேனும் துர்ப்பிரயோகம் செய்யாது எம்முடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## பாருக்குள்ளே

(2ம் பக்கத் தொடர்ச்சி)
நிலைக்கச் செய்ததிலும் இவர்களுடைய பங்களிப்பு பிரமிப்புக்குரியதாகத்தானிருக்கிறது, இதே வேளை, 'சம்பிரதாயம்' என்கின்ற குடும்ப மரபுகளும் இந் நடனங்களிடையே வளர்ந்து வந்திருக்கின்றன.

பின்னர் 19ம் நூற்றுண்டில் ஆக்கிரமித்த பிரித்தானிய கல்வித்திட்டம் கலை மரபுகளிலிருந்து அக் காலச் சந்ததியினரைப் பிரித்தே வைத்தது. ஆலயங்களிலும் நடனம் தடைப்படுத்தப்பட்டது. உண்மையில், 20ம் நூற்றுண்டில் இக்கலை முற்றுகவே அழிந்துவிட அதன் சிதைந்துபோன — இலேசான வடிவங்களாக வடக்கில் 'நோச்' என்றும் தெற்கில் 'சதுர்' என்றும் அழைக்கப்பட்டவற்றையே பார்க்க முடிநதது. இவை கடந்த காலத்து உண்மையின் நிகழ்வுகளாகவே தோற்றின.

அண்மைக் காலத்தில் ஏற்பட்ட விழிப்பு; புராதன—பெருமைமிக்க கலை, கலாசாரங்களில் ஏற்பட்ட புத்துணர்வு—ஆர்வம் இப் பல்வேறு சாஸ்திரீய நடனவகைகளது மறுமலர்ச்சிக்கும் பெருமளவில் உதவிற்று. பரத நாட்டியம், கதகளி, மணிப்புரி, ஒடிஸி. கதக் ஆகியவற்றோடு மேலும் ஒரு சாஸ்திரீய நடனவகையான மூச்சிப்புடியும் அங்கீகாரத்தைப் பெற்றது.

ஆக விலைமதிக்க முடியாத அரிய செல்வங்கள் காஞ்சிபுரத்தில் தூசடைந்துகிடக்க, அவற்றைறைப் பக்குவமாகத் தூக்கி பிரகாசிக்க வைப்பதில் சிலர் விசுவாசமாக ஈடுபட்டார்கள். அப்படியானவர்களில் ஒருவர் பத்மா சுப்ரமண்யம்.

—சிலை வடிவில் காணப்பட்ட பலகரணங்கள் அவரது ஆராய்ச்சியின்உயிர்ப்படைந்து உயிர்வடிவம் பெற்றன.

தாமே ஒரு 'நடன' ஆராய்ச்சிக்கூடமாகத்' 'திகழ்பவர்' நடனத்துக்கு ஓர் ஆராய்ச்சி மாகாநாட்டையும் கூட்டினுர்.

(ஞாயிறு இதழில் தொடரும்)

# கோயில் கதவையுடைத்து மூர்த்திகளின் நகை களவு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ்பகுதிக் குட்பட்ட பெருமாக் கடவைப் பிள்ளையார் கோவில் கதவு உடைக்கப்பட்டு அம்மன், பிள்ளையார் விக்கிரகங்களுக்கு அணிவிக்கப்படும் விலையுயர்ந்த நகைகள் களவாடப்பட்டுள்ளன.

அண்மையில் ஒருதினம் மாலை மேற்படி ஆலயத்தில் முத்துக்குமாரசாமி உமாபதி சிவம் ஐயர் தாம் பூசை செய்துவிட்டு ஆலயக்கதவைப் பூட்டிவிட்டுச் சென்றதாகவும் அடுத்தநாட்காலை ஆலயத்தில் தாம் பூஜைசெய்வதற்கு வந்த பொழுது ஆலயக்கதவு உடைக்கப்பட்டு அம்மன் விக்கிரகத்துக்கு அணிவிக்கப்படும் உருத்திராக்கம்மாலை தாலிஆகியனவும் பிள்ளையாருக்குரிய ஒட்டியாணம், முகமூடி, பதக்கம், சங்கிலி, நெற்றிப்பட்டம் ஆகியனவும் காணவில்லை எனவும் பின்பு ஆலயத்துக்கு அண்மையிலுள்ள வயல் வெளியில் பார்த்தபோது அம்மனுக்குரிய நகை கிடக்கக் கண்டெடுத்துள்ளதாகவும் சுன்னாகம் பொலிசில் புகார் செய்துள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர் எஸ் சிவராசா, பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கே. கந்தசாமி, ரி. குணசிங்கம் ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (மா)


## அரிசி ஆலை விற்பனைக்கு உண்டு

கிளிநொச்சியில் கோட்டா நெல் குற்றக்கூடிய வசதியுள்ள ஓர் அரிசி ஆலை விற்பனைக்கு உண்டு

தொடர்பு கொள்ளவும்:
விளம்பர இல: 2121,
C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (2121)



## ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்

### தேவை

அனுபவமுள்ள கிளீனர்கள் (Cleaners) தேவை. கீழ்க்கண்ட விலாசத்திற்கு உடனடியாக விண்ணப்பிக்கவும்.

ஹோம் பினன்ஸ் லிமிட்.
இல. 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்


## மானிப்பாய் மறுமலர்ச்சிமன்றம்

(மானிப்பாய்)

மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றத்தின் பத்தொன்பதாவது ஆண்டு வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மன்றத் தலைவர் தலைமையில் மானிப்பாய் இந்துக்கல்லூரி நூலக மண்டபத்தில் நடைபெறு

மேற்படி கூட்டத்தில் புதிய வருடத்துக்கான நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்படுவார்கள். (மண்.நி)

## பிரதான...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தென்றும் பல வர்த்தக ஸ்தாபனங்கள் முக்கியமாக நெஸ்ரிலி' ஸ்தாபனம் விளையாட்டுச் சங்கத்துக் கேற்படும் செலவினங்களை வருடம் பூராவும் ஏற்றுக்கொள்ள முன்வந்துள்ளதென்றும் தெரிவித்த திரு. நவரத்தினம் இந்த நன்கொடையைக்கொண்டு கழகங்களுக்கும் லீக்குகளுக்கும் முக்கியமாக உதைபந்தாட்டப்பயிற்சி முகாமுக்குவரும்வீரர்களுக்கும் சகலவசதிகளும் செய்வதுடன் உதைபந்தாட்டப் பயிற்சியாளர்களை உருவாக்குவதுடன் அவர்களுக்கு ஏற்ற ஊதியமும் கொடுக்கத் தீர்மானித்துள்ளதாவும் தெரிவித்தார்,

''விளையாட்டுப் போட்டியில் மத்தியஸ்தர்களின் தவறுகளைத் தவிர்ப்பதற்கு தொலைக்காட்சி சேவையைப் பயன்படுத்த எண்ணியுள்ளதாகவும் அவர் சொன்னர்.

அகில இலங்கை ரீதியில் 4,000 பள்ளிக்கூடங்களிலிருந்தும் 80 பள்ளிக்கூடங்கள் தான் உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றுவது குறித்து கவலை தெரிவித்த திரு. நவரத்தினம், சகலரும் உதைபந்தாட்ட வளர்ச்சிக்கு பாடுபடவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். (மா)

## சினிமாவுக்குப் போனதை தாயார் கண்டித்தார்; மகன் நஞ்சுகுடித்தார்!

(யாழ்ப்பாணம்)

சினிமாப்படம் பார்க்கப் போனதை தாயார் கண்டித்ததைத் தொடர்ந்து மகன் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை கொண்டார்.

மல்லாகம் குளமங்காலைச் சேர்ந்த சவரிமுத்து மக்ஸி (23 வயது) என்பவரே தற்கொலை செய்துகொண்டவராவர்.

மரணவிசாரணை நடாத்திய அதிகாரி திரு. நா. தம்பிராசா தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

சுன்னாகம் பொலிஸ் [illegible] கான்ஸ்டபிள் [illegible] குணசிங்கம் சாட்சிகளை ஆஜர் செய்தார். (மா)

## குட்டிமணி மீதான கொலைவழக்கு ஜூரிகள்இன்றி விசாரிக்கப்படும்

(கொழும்பு)

குட்டிமணி என்றழைக்கப்படும் செல்வராசா யோகச்சந்திரன் மீதான முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் குமார் கொலைவழக்கு விசாரணைகள் ஜூரிகள் இன்றி எதிர்வரும் பெப்ரவரி 23ல் நடைபெறுமென கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. ரியூடர் டி அல்விஸ் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இத்தீர்ப்பினை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில அப்பீல் செய்ய விருப்பதாக எதிரி தரப்புச் சட்டத்தரணியான திரு. எஸ். நவரட்ணம் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 22-வது பிரிவின்கீழ் ஜூரர்கள் இன்றியே குட்டிமணி மீதான வழக்கு விசாரணைகள் இடம்பெறவேண்டுமென அரச சட்டத்தரணி திரு. ஜே. எம். டி, சில்வா வாதிட்டார்.

எதிரி தரப்புச் சட்டத்தரணி திரு. எம். சிவசிதம்பரம் தனது வாதத்தில் மேற்படி அரச சட்டத்தரணியின் வாதம் இவ்வழக்கு விசாரணை வழமையான ஜூரர்கள் முன்னிலையிலான விசாரணைக்ளுக்கு மாறுக விளங்குகிறதெனக் குறிப்பிட்டார்.

குட்டிமணி மீதும் அவரது சகாக்கள் மீதும் கிராமிய வங்கிக்கொள்ளை, கூட்டுறவுக் கடைக்கொள்ளை போன்ற கொள்ளை வழக்குகளில் பிரதான சாட்சியாகவிருந்த முன்னாள்இன்ஸ்பெக்டர் குமார் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ள தொடர்பாகவே மேற்படி வழக்குத்தொடரப்பட்டது.

மேல் நீதிமன்ற நீதிபதி திரு. ரியூடர் டி. அல்விஸ் பெப்ரவரி 23ல் குட்டிமணியை நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு இராணுவ அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (கி)

## நீரிறைக்கும் இயந்திர உதிரிப்பாகம் திருட்டு

(யாழ்ப்பாணம்)

தோட்டத்தில் வைக்கப்பட்டிருந்த மூவாயிரம் ரூபா பெறுமதியான நீரிறைக்கும் இயந்திரத்தின் உதிரிப்பாகங்கள் திருடப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

உரும்பராய் கிழக்கு செல்லத்துரை ரட்னசபாபதி என்பவரது தோட்டத்திலே இக்களவுநடைபெற்றது.

சுன்னாகம் பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டுள்ளனர். (மா)

## இடமாற்றத்தை ரத்துச்செய்ய கோரிக்கை

(மட்டுவில்)

மகாதேவா பால நிரப்பு வேலையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. இராமகிருஷ்ணன், தொழில்நுட்ப அலுவலர் திரு. நாகேஸ்வரன் ஆகிய இருவரதும் இடமாற்றத்தை ரத்துச்செய்யுமாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் நெடுஞ்சாலைகள் திணைக்களத்தைக் கோரியுள்ளார்.

நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. எஸ். இராமகிருஷ்ணனுக்கு அம்பாறைக்கும், தொழிநுட்ப உதவியலுவலர் திரு. வி. நாகேஸ்வரனுக்கு நுவரேலியாவுக்கும் இடமாற்ற உத்தரவு கிடைத்துள்ளது. மகாதேவா பால வேலைகள் பூர்த்தியாகும்வரை அவர்களை இடமாற்றம்செய்ய வேண்டாம் என்று கோரி சாவகச்சேரி எம்.பி. திரு.வி. என். நவரத்தினம் நெடுஞ்சாலை திணைக்களப் பணிப்பாளருக்குத் தந்தி அனுப்பியுள்யுள்ளார்.

## இந்தியத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்களைச் சந்தித்ததாகத் தெரிகின்றது. இந்திய ஜனாதிபதியின் யாழ்ப்பாண வருகை பற்றி இந்தியத் தலைவர்களுடன் அவர் ஆலோசனை நடத்தினரா?என்பது தெரியவில்லை.

பாராளுமன்ற ஒன்றிய மகாநாட்டில் உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவிக்கும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்ததாகவும், இச்சந்தர்ப்பத்தில் பாராளுமன்றங்களில் கேள்வி நேரங்களை உறுப்பினர்கள் பயன்படுத்தும் முறைகுறித்தும் கூட்டுத்தாபனங்களின் நிர்வாகத்தின்மீது பாராளுமன்றங்கள் கண்காணிப்பு வைத்திருப்பதுபற்றியும் அவர் கருத்து வெளியிட்டதாகவும் தெரிகின்றது. (மா)

## இலங்கை...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

போல் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உறவுப் பாலத்தை நாம் பலப்படுத்த வேண்டும்' என்ருர்'

## தராசு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

2:பரந்தன்-பூநகரி, 3:சாவகச்சேரி. 8;கொடிகாமம், 9: கள்ளியன்காடு திருநெல்வேலி, 10: யாழ்ப்பாணம்- சுன்னாகம், 15: நெல்லியடி - உடுப்பிட்டி- நவின்டில், 16: பருத்தித்துறை- புலோலி, 17: ஏனைய சந்[illegible]

யாழ். மாவட்டத்திலுள்ள மரக்கறி, மீன்சந்தைகளில்தி[illegible] சரி லியாபாரம் செய்ப[illegible] களிடமிருந்து கைப்பற்[illegible] பட்டுள்ள தராசுக்குரியவர்[illegible] தங்கள் அடையாளங்க[illegible] நிரூபித்து முத்திரையி[illegible] வேண்டுமென்றும். இவர்களுக்கு எதிராகத் வழக்குதாக்கல் செய்யப்படமாட்டா தென்றும் உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர் திரு. த மார்க்கண்டு தெரிவித்துள்ளார். (மா)


உங்கள் பணத்திற்கு....



25% வட்டி...

சிறந்த பாதுகாப்பு வருமானம் உத்தரவாதம்

25% 2 வருட வைப்புப்பணத்திற்கான கால முதிர்வு வட்டி...

23% 2 வருட வைப்புப்பணத்திற்கான மாதாந்த வட்டி...

21% 1 வருட வைப்புப்பணத்திற்கான மாதாந்த வட்டி...

மகாராஜா முதலீட்டு (வரையறுக்கப்பட்ட) நிதிநிறுவனம்
122 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 8267

கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள் 27% வரையுண்டு

| | ரூ. 500கு அதிகமான வைப்புக்கு | | 1,00,000 ரூபாய்க்கு அதிகமான தொகைக்கு கால முதிர்வின்போது |
|---|---|---|---|
| | மாதாந்தம் வட்டி | காலமுதிர்வு வட்டி | |
| 6 மாதம | — | 18% | 21% |
| 12 மாதம | 21% | 22% | 23% |
| 24 மாதம | 23% | 25% | 27% |

இயக்குனர்கள்

1. திரு. ஆர். மகாராஜா (நிர்வாக இயக்குனர்)
2. திரு. ஆர். இராஜமகேந்திரன் (நிர்வாக இயக்குனர்)
3. திரு. வி. என. குமாரசாமி, F.C.A.(Eng. & Wales), ATII (Eng.) M.Inst. A.M (Eng.), AMBIM(Eng.), F.C.A.(Cey.)
4. திரு. பி. மகிந்தா B. Sc. (Hons)
5. திரு. வி. சண்முகம் LLB (Lond) Hons. A. I. B. (Lond) சட்டத்தரணி
6. திரு. டி. ஜே. குணவர்த்தன B.Sc., A.C.A., A.C.M.A
7. திரு. டபிளயு. பலநாயக்கா MBIM (Eng.)
8. திரு. சு. குணசேகரா

சுருக்கமான தகவல்கள்

| நிதி அறிக்கை | 1977/78 ரூபாய் | 1978/79 ரூபாய் | 1979/80 ரூபாய் |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் | 4,030 | 250,000 | 250,000 |
| ஒதுக்கிய மூலதனம் | 143,588 | 246,615 | 1,706,147 |
| வைப்பு மூலதனம் | 3,579,820 | 11,325,480 | 22,139,162 |
| நிகரலாபம (வரிகட்ட முன்) | 181,417 | 667,461 | 2,135,874 |
| நிகரலாபம் (வரிகட்டிய பின்) | 163,916 | 453,777 | 1,635,873 |
| பங்குலாபம் | | 250,000 | 187,500 |

வியாபார நோக்கங்கள்

★ முதலீட்டு வைப்பு
★ கைத்தொழிலாளர்களுக்கு, இயந்திராதிகள், மூலப்பொருள் இறக்குமதிக்கு கடன்வசதி
★ காப்புறுதி முகவர்.

ஸ்தாபகம்: 29-09-1976.
தலைமையகம்: யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
காரியாலயம்: 54, பாங்ஷால் வீதி, கொழும்பு.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஜனவரி மீ 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O., Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.